எப். வெயின் மேக் லியோட்

# சோதனைகளை மேற்கொள்ளுதல்

இயேசு கிறிஸ்து சோதனைகளையும் சாத்தானின்
கண்ணிகளையும் எவ்வாறு மேற்கொண்டார்
(லூக்கா 4:1-13)

# சோதனைகளை

# மேற்கொள்ளுதல்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம்

இருந்து சில பாடங்கள்

(லூக்கா 4:1-13)

சோதனைகளையும், பிசாசு மற்றும் அவனுடைய கூட்டாளிகளின் கண்ணிகளையும் மேற்கொண்டு வெற்றிகரமான மற்றும் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான நடைமுறை வழிகள்

**எப். வெயின் மேக் லியோட்**

"Overcoming Temptations"

by F. Wayne Mac Leod

*Tamil Edition*

Edition 1, Printing 1
1,000 Copies

Copyright © by Wayne Mac Leod

Originally Published in English as
"Overcoming in Spirit and Truth" *by*
**LIGHT TO MY PATH BOOK DISTRIBUTION**
Sydney Mines, N.S. CANADA
www.ltmp.ca

All Rights Reserved.

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system, without permission in writing from the author and publisher.

Unless otherwise indicated, Scripture quotations are taken from the Holy Bible (Tamil O. V.)

(Tamil Edition) Publishing & Distribution by
MARANATHA PUBLISHING COMPANY
MaranathaPublishers@gmail.com

Printed by Alleluia Print Services
www.AlleluiaPrints.com

# பொருளடக்கம்

1. ஆவியினால் நடத்தப்பட்டு வனாந்தரத்திற்குள் சென்றார் ................ 9

2. அவர் எதுவும் சாப்பிடவில்லை .............. 23

3. கல்லை அப்பமாக மாற்றுதல் ................. 33

4. உயர்வான இடத்திற்கு வழிநடத்தப்படுதல் ................................... 45

5. நீங்கள் யாரை ஆராதிப்பீர்கள்? ............ 55

6. எருசலேமுக்கு கொண்டு செல்லுதல் ............................................ 65

7. தேவனை பரீட்சை பார்த்தல் .................. 75

8. ஒரு சரியான சந்தர்ப்பம் ........................ 91

9. ஆவியும் உண்மையும் ........................... 101

# முகவுரை

லூக்கா 4:1-13 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுவின் சோதனையையை பற்றிய பாடம் இது.

இந்த வசனங்களை குறித்து அதிகமான காரியங்கள் கூறப்படலாம், இந்த தலைப்பிலே அதிகமான உரைகளும் வெளிவந்து இருக்கின்றன. அந்நாட்களில் இயேசு சந்தித்த சோதனைகளையும், கஷ்டங்களையும் புரிந்துகொண்டு, இந்நாட்களில் அதை வாழ்க்கையில் நடைமுறைபடுத்துவது எப்படி என்பதை காணவேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்.

நாம் ஒவ்வொருவரும் சோதனைகளையும், கஷ்டங்களையும் சந்திக்கிறோம். நம்மை போலவே சோதிக்கப்பட்டும், பாவமில்லதவராக இருந்த ஆண்டவர் இயேசுவை விட (எபிரேயர் 4:15ஐ பார்க்க) சிறந்த உதாரணம் வேறு எவரும் இருக்க முடியாது. லூக்கா 4:1-13 வசனங்களில் சாத்தானின் கோபாக்கினைக்கு எதிராக இயேசு எவ்வாறு வெற்றிசிறந்தார் என்பதை நாம் பார்க்கிறோம்.

இந்த வேதபகுதியில் இருந்து நான்கு காரியங்களை ஒவ்வொரு வாசகரும் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். முதலாவதாக, முழுவதும் தேவனாக இருந்த ஆண்டவர் இயேசு சாத்தானின் சோதனைகளை சகித்தார். உங்களுக்காகவும் எனக்காகவும், தன்னையே தாழ்த்தி அவர் இதை சகித்துக்கொண்டார். சாத்தானிடம் இருந்து சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் சந்தித்தார் என்றால் நாமும் அவற்றை கடந்துசென்று தான் ஆகவேண்டும். கிறிஸ்தவ

வாழ்க்கை என்பது எப்போதும் சுலபமாக இருக்கும் வாழ்க்கை அல்ல. இயேசு தன்னுடைய ஊழியத்தை தொடங்கும்போதும் முடிக்கும்போதும் சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டார்.

இரண்டாவதாக, இந்த வேதபகுதியில் ஒவ்வொரு வாசகரும் இயேசுவின் குணாதிசயத்தை பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவருடைய நேர்மை சந்தேகத்துக்கு இடமில்லாமல் இருந்தது. சத்துருவின் கடுமையான சோதனைக்கு மத்தியிலும் தன்னுடைய வாழ்க்கையில் பிதாவின் சித்தத்தை இயேசு பற்றிபிடித்துக்கொண்டார். சாத்தானுடன் அவர் செய்த போராட்டத்தில் இருந்து அவர் முற்றிலும் தூய்மையானவராகவும், குற்றமற்றவராகவும் வெளியேறினார். எல்லா கனத்துக்கும், ஆராதனைக்கும் பாத்திரமான பரிபூரண இரட்சகர் அவர்.

மூன்றாவதாக, பரிபூரண தேவனுடைய குமாரனாகிய ஆண்டவர் இயேசுவுக்கு சோதிக்கப்படுவதையும், பாடுகளை அனுபவிப்பதையும் குறித்து நன்றாக தெரியும். நம்முடைய வேதனையையும், தேவைகளையும் அவர் அறிவார். நாம் உணரும் விதமாகவே அவரும் உணர்ந்தார். நம்முடைய வேதனையையும், சோதனைகளையும் அவர் புரிந்துகொள்வார் என்னும் முழு தைரியத்தோடே நாம் அவரிடம் வரலாம்.

இறுதியாக, சோதிக்கப்படும் நாட்களில், பிதாவின் வார்த்தைகளும், ஆவியானவரின் வார்த்தைகளுமே இயேசுவுக்கு பெலனாக இருந்தன. இன்று நமக்கு இந்த கருவிகள் கிடைக்கப்பெறுகின்றன. மேற்கொள்ளும் வல்லமை நமக்குள்ளாக இல்லை, ஆனாலும் கிறிஸ்துவை போல தேவனுடைய வழிநடத்துதலின் மீது நம்பிக்கை வைத்த அனைவருக்கும் இந்த வல்லமை கிடைக்கப்பெறுகின்றது.

இந்த புத்தகம் உங்கள் வாழ்க்கையை மாற்றாமல் போகலாம், ஆனால் இதை தேவன் ஒரு கருவியாக

பயன்படுத்துவார் என்று நாம் நம்புகிறேன். இந்த புத்தகத்தை வாசிப்பதோடு நிறுத்திவிடாமல், இதை தியானிக்க நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். வார்த்தையின் சத்தியத்தை எடுத்து உங்கள் சூழ்நிலையில் அதை செயல்படுத்துமாறு பரிசுத்த ஆவியானவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். லூக்கா 4:1-13 வசனங்களில் உள்ள சத்தியம், மீண்டுமாக உயிர்பெற்று, இந்த உரையை படிக்க நேரம் எடுத்துக்கொள்ளும் அனைவருக்கும் பெலத்தையும் ஊக்கத்தையும், ஆறுதலையும் அளிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபம். உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய மகிமைக்காக இந்த வேதவாக்கியத்தை பயன்படுத்துவதில் ஆண்டவர் தாமே பிரியமாயிருப்பாராக.

**- எப். வெயின் மேக் லியோட்**

# 1

# ஆவியினால் நடத்தப்பட்டு வனாந்தரத்திற்குள் சென்றார்

*இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, நாற்பதுநாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. (லூக்கா 4:1-2)*

ஆண்டவர் இயேசுவின் ஞானஸ்நானமே லூக்கா 4 ஆம் அதிகாரத்தின் பின்னணி ஆகும். மத்தேயு 3:13-4:1 வசனங்களில் இது தெளிவாக தெரிகின்றது:

*அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்*

*யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்.*

*இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.*

*இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*

*அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.*

*அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்.*

லூக்கா 4:1ல் இயேசு யோர்தானை விட்டுத் திரும்பியதாக கூறுகின்றது. யோர்தானிலே தான் இயேசு யோவான் மூலமாக ஞானஸ்நானம் பெற்றார். இதுவே அவருடைய பொது ஊழியத்தின் தொடக்கமாக இருந்திருக்கும்.

இயேசு ஞானஸ்நானம் பெற்ற நாளிலே முக்கியமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. மத்தேயு 3:16 வசனத்திலே அவர் தண்ணீரை விட்டு வெளியே வந்தபோது, பரிசுத்த ஆவியானவர் புறாவை போல அவர் மீது இறங்கியதாக நாம் வாசிக்கிறோம். லூக்கா 4:1 வசனத்தில் இயேசு "ஆவியில் நிறைந்தவராகவும்", "ஆவியினால் நடத்தப்படுவதாகவும்" நாம் வாசிக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரின் நிறைவே அவருடைய ஊழியத்திலும், கீழ்ப்படிதலிலும் கிறிஸ்துவின் வல்லமையாக இருந்தது. ஆண்டவர் இயேசு தேவனுடைய குமாரன் என்பது உண்மை தான், ஆனாலும் அவரும் பரிசுத்த ஆவியினால் நிறைக்கபபட்ட வேண்டியவராக இருந்தார். பிதாவும், பரிசுத்த ஆவியானவரும் இல்லாமல் அவர் தனியாக செயல்படவில்லை. பிதா கிறிஸ்துவுக்கு கொடுத்த அனைத்தையும் நிறைவேற்றுவதற்காக அவர்களோடு முற்றிலும் ஒருமித்து இருந்து, பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும் வல்லமையையும் தன் வாழ்விலே பெற்றுக்கொண்டார்.

பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை ஆராய்ச்சி செய்வது நம்முடைய பாடத்தின் நோக்கம் இல்லை என்றாலும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவை குறித்து ஒரு வார்த்தையை கூறுவது பயனுள்ளதாக இருக்கும். பரிசுத்த ஆவியானவரின் நிறைவு

என்றால் என்ன? இந்த தலைப்பை குறித்த பல வகையான கருத்துக்கள் இருந்தாலும், என்னுடைய கருத்தை நான் அடிப்படை வடிவத்திலே விவரிக்கிறேன். ஒரு காரியத்தின் நிறைவை பெற வேண்டும் என்றால், மற்றொரு காரியத்தை காலிசெய்ய வேண்டும். வேறு வகையில் கூறினால், பரிசுத்த ஆவியானவர் நிறைவாக இருந்தால், சுயத்திற்கு இடமே இருக்காது. நம்முடைய சித்தங்களையும், உள்ளங்களையும் வாழ்க்கைகளையும், ஊழியத்திற்கும் பரிசுத்த ஆவியானவரின் செயல்களுக்கும் ஒப்புக்கொடுத்தல் என்பதே இதன் அர்த்தம். நம்முடைய யோசனைகளையும், திட்டங்களையும் அவரிடம் கொடுத்துவிட்டு, நம்முடைய வாழ்க்கையில் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க அர்ப்பணித்தல் என்பதே இதன் பொருள்.

ஊழியத்திற்கும், கிறிஸ்துவின் சாயல் நம்மில் வெளிப்படுவதற்கும் மிகப்பெரும் தடையாக இருக்கும் காரியம் நம் சுயம் தான். நம்முடைய சொந்த முயற்சியினால் நாம் தேவன் விரும்புவதை நிறைவேற்றவும் முடியாது, தேவன் விரும்புகிறவராக இருக்கவும் முடியாது. இருந்தாலும் நம்மில் பலர் அவ்வாறு முயற்சித்துக்கொண்டு தான் இருக்கிறோம். கிறிஸ்தவ ஊழியங்கள் மனித முயற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் நிறைந்து இருக்கின்றன. தேவனுடைய ஆவியானவர் நம்மிலும், நம் மூலமாகவும் கிரியை செய்ய அனுமதித்தால் எவ்வளவு பெரிய மாற்றம் உண்டாகும்! நாம் சுயத்துக்கு மரித்து, தேவனுடைய ஆவியானவருக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்தால் நம்முடைய திருச்சபைகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும்? நம்முடைய சுயத்தை வெறுமையாக்கி, அவர் நம்மை நிறப்பும்படி செய்தால் அது நமக்கு எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும்.

இயேசு பரிசுத்த ஆவியினால் நிறைந்து இருந்தார். அவருடைய சித்தம் பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு இருந்தது. அவருடைய தைரியம்

ஆவியானவரின் வல்லமையில் இருந்தது. கிறிஸ்துவின் மீதும், அவருடைய செயல்கள், மனப்பாங்குகள் மற்றும் வார்த்தைகள் மீது பரிசுத்த ஆவியானவர் முழு கட்டுப்பாட்டை வைத்து இருந்தார். இப்படி தான் ஆண்டவர் இயேசு தன்னுடைய ஊழியத்தை தொடக்கியும் முடித்தும் வைக்கிறார்.

கிறிஸ்து ஆவியினால் நிறைந்தவராக மட்டும் இல்லாமல், அவர் ஆவியினால் நடத்தப்பட்டதாகவும் லூக்கா 4:1 கூறுகின்றது. பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவது சாத்தியமான ஒரு காரியம் தான். எபேசியர் 4:29-31 வசனங்களில் அப்போஸ்தலர் பவுலும் இதை குறித்து பேசுகிறார்:

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.

கெட்ட வார்த்தை, கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் மற்றும் துர்க்குணத்தின் மூலமாக பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துதல் எப்படி வருகிறது என்பதை கவனியுங்கள். கீழ்ப்படியாமையிலும் பாவத்திலும் நடந்து நாம் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகின்றோம். ஆவியின் நிறைவை பெறுவதற்கு பாவமே எதிரியாக இருக்கிறது. தேவனுடைய ஆவியின் நிறைவை பெறுவதற்கு, நாம் ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிதலோடு இருக்க தீர்மானிக்க வேண்டும். ஆண்டவர் இயேசு இதையே கூறி இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் நிறைவும் நடத்துதலும் இணைந்து செல்ல வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவதற்கு நாம் கீழ்ப்படிந்து அவரிடம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். இப்படி தான் இயேசு தன் வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் செய்த எல்லாவற்றிலும், இயேசு ஆவியானவரின் வழிநடத்துதலை நாடினார்.

நான் செய்யும் எல்லாவற்றையும் ஜெபத்திலே அவரிடம் ஒப்புக்கொடுப்பதை பற்றி சமீபகாலமாக கர்த்தர் என்னிடம் அதிகமாக போதித்து வருகிறார். கர்த்தரையும் அவருடைய நோக்கத்தையும் தேடாமல் எவ்வளவு காரியங்களை நான் கடந்த ஆண்டுகளில் செய்து இருக்கிறேன் என்பது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது. ஜெபிக்காமல் நாம் எத்தனை காரியங்களை செய்கிறோம்? இயேசு ஊழியம்செய்த போது, அவர் பிதாவின் சித்தத்தையும், ஆவியானவரின் உதவியையும் தன்னுடைய செயல்கள் எல்லாவற்றிலும் நாடினார்.

முதலாம் வசனத்தில் ஆவியானவர் கிறிஸ்துவை எங்கே வழிநடத்தினார் என்பதை கவனியுங்கள். அவர் ஆவியானவரால் வனாந்தரத்திற்கு நடத்தப்பட்டார். வனாந்தரம் என்பது வறண்ட தரிசு நிலம். இவ்விடத்தில் இது சோதனையின் இடமாக இருக்கிறது. சோதனை எங்கிற வார்த்தை பரீட்சை அல்லது வழக்கு விசாரணையை குறிக்கின்றது. வனாந்தரத்திலே ஆண்டவருக்கு இதுதான் நடக்க இருந்தது. அவர் பரீட்சைபார்க்கப்பட்டு, விசாரிக்கப்படுவார். நாற்பது நாட்கள் அவர் பிசாசோடு போராடுவார்.

தேவ ஆவியானவர் அவரை நேரடியாக நாற்பது நாள் கடுமையான ஆவிக்குரிய போராட்டத்திற்குள் நடத்தினார். நாம் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது எல்லாம் வெற்றியாகவும் மகிமையாகவும் மாறும் என்று நினைக்க விரும்பினாலும், இந்த வேத பகுதி பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுக்கும்போது நாம் போர்களத்தின் நடுவிலே தூக்கி வீசப்படலாம் என்பதையும் காட்டுகின்றது. இயேசுவுக்கு அது

தான் சம்பவித்தது. அவருடைய ஊழியம் முரண்பாட்டில் தொடங்கி, மரணத்தில் முடிவடைய இருந்தது. இவை அனைத்திலும் அவர் முற்றிலும் ஜெயம் பெற்றார்.

நாற்பது நாட்கள் வனாந்தரத்திலே ஆண்டவர் இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாற்பது நாட்களில் என்ன சம்பவித்தது என்பதை வேதாகமம் நமக்கு கூறவில்லை. இயேசுவின் பிறப்பிலும், இறப்பிலும் பிசாசு என்ன செய்ய முயற்சித்தான் என்பதை நாம் புரிந்துகொண்டு இருக்கிறோம். மத்தேயு 2:16, வசனத்திலே குழந்தை இயேசுவை ஏரோது கொல்லும்படி செய்ய சாத்தான் முயற்சித்தான் என்பதை நாம் வாசிக்கிறோம். அவனால் கண்டுபிடிக்க முடியாதபோது, இரண்டு வயதுக்கு உட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும் என்று இந்த பொல்லாத மன்னன் ஆணையிட்டான். சாத்தானால் என்ன செய்ய முடியும் என்பதை இது காண்பிக்கிறது.

பூமியிலே ஆண்டவர் இயேசுவின் ஊழியத்தின்போது, அக்காலத்தில் இருந்த மதத்தலைவர்களை தூண்டி விட்டு சிலுவையில் அறையும்படி சாத்தான் ஏவினான். முள் முடியை அவருடைய தலையில் வைத்து போர்ச்சேவகர்கள் கிண்டல் செய்தார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் அவரை அடித்து சிலுவையில் ஆணியால் அறைவதை நாம் பார்க்கிறோம். சிலுவையின் கொடூரத்திலே அவர் தொங்கிக்கொண்டு இருந்தபோது மக்கள் அவருக்கு எதிராக திரும்பியதை நாம் பார்க்கிறோம். இவை அனைத்திலும் பிசாசின் வெறுப்பும், மூர்க்கமும் கோபமும் நம்முடைய இரட்சகரின் மீது கட்டவிழ்க்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இவை அனைத்தும் மிகவும் கடினமானதும், துன்பமானதுமான நாட்கள் என்பதை நாம் உறுதியாக கூறிவிடலாம். அந்நாட்களில் நாற்பது நாட்கள் வனாந்தரத்தில் நடைபெற்ற போராட்டத்திற்கு நித்திய விளைவுகள் இருக்கலாம்.

முதலாம் வசனத்திலே பரிசுத்த ஆவியானவர் பிசாசினால்

சோதிக்கப்படுவதற்காக இயேசுவை வனாந்தரத்திற்கு வழிநடத்தினார் என்பதை கவனியுங்கள். எதற்காக அப்படிப்பட்ட இடத்திற்கு பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வழிநடத்த வேண்டும்? லூக்கா 4 இதற்கான விடையை கொடுக்கவில்லை. இதற்கு எண்ணற்ற காரணங்கள் இருக்கலாம். இந்த சோதனைக்கான காரணமாக இருக்கக்கூடிய மூன்று காரியங்களை நான் முன்வைக்கிறேன்.

## கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ள

இந்த பூமியிலே இயேசு மனிதனாக வாழ்ந்தார். ஒரு குழந்தையாக உணவுக்காகவும், உடைக்காகவும் தன்னுடைய தாயாரை அவர் சார்ந்து இருந்தார். ஒரு பாலகனாக, அவர் மற்ற குழந்தைகளை போலவே நடக்கவும், பேசவும் கற்றுக்கொள்ள வேண்டியவராக இருந்தார். அவர் வளர்ந்தபோது, அவருடைய சூழ்நிலையை பற்றி அறிந்துகொண்டு, சமுதாயத்திலே எவ்வாறு நடந்துகொள்வது என்பதை கற்றுக்கொள்ள வேண்டியவராக இருந்தார். தேவனுடைய பணிவிடைக்காரராக, அவர் பிதாவுக்கு கீழ்ப்படிந்து நடக்க கற்றுக்கொள்ள வேண்டியவராக இருந்தார். நம்மை போலவே அவர் சோதனைகளை சந்தித்து, அவற்றை மேற்கொள்ள பிதாவின் பெலத்தை சார்ந்திருக்க கற்றுக்கொள்ள வேண்டியவராக இருந்தார். எபிரேயர் 5:7-8 வசனங்களில் இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தாலும், அவர் பாடுகள் மூலமாகவும், போராட்டங்களினாலும் கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார்.

> *அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். (எபிரேயர் 5:7-8)*

அவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவம், சோதனைக் காலத்திலே சம்பவிக்க அதிக வாய்ப்பு உண்டு. “சோதனை” என்று இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை பரிசோதனைக்காக பயன்படுத்தப்படும் அதே வார்த்தை தான். அந்நாட்களில் இயேசுவுக்கு இது தான் சம்பவித்தது. அவர் பரிசோதிக்கபப்ட்டார். அவர் முற்றிலும் வெற்றியோடு நடக்க கற்றுக்கொண்டு இருந்தார். வாழ்க்கையின் துன்பங்களை எதிர்கொண்டு மேற்கொள்வது எப்படி என்று அவர் கற்றுக்கொண்டு இருந்தார். பிதாவானவர் அவருக்காக ஆயத்தம் செய்து இருந்த ஊழியத்திற்காக அவர் ஆயத்தம் செய்யப்பட்டுக் கொண்டு இருந்தார். அவர் பாடு அனுபவித்த காரியங்கள் மூலமாக சோதிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, பெலப்படுத்தப்பட்டார். இந்த சோதனைகள் அனைத்திலும், பிதாவையும், பரிசுத்த ஆவியானவரின் ஞானத்தையும் முற்றிலுமாக சார்ந்து இருந்தார்.

ஆவியினால் நிறைக்கப்படுவது என்றால் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று அர்த்தம் கிடையாது. இயேசு ஆவியினால் நிறைக்கப்பட்டு இருந்தார், ஆனாலும் அவர் பாடு அனுபவித்த காரியங்கள் மூலமாக கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார். வனாந்தரத்திலே நாற்பது நாட்கள் பரிசோதனைக்கு பிறகு வெளியே வந்த இயேசு, அவற்றை எதிர்க்க அதிக பெலன் பெற்றார். கிறிஸ்துவை பெலப்படுத்தவும், அவரை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தவும் அந்நாட்களில் நடந்த சம்பவங்களை தேவன் பயன்படுத்தினார்.

இயேசுவுக்கு சம்பவித்த அதே காரியம் நமக்கும் சம்பவிக்கும். இவ்வுலகத்திலே நாமும் சோதனைகளையும், பாடுகளையும் சந்திக்க வேண்டும். நம்மை பெலப்படுத்தவும், கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் கற்றுக்கொள்ளவும் இந்த பாடுகளை தேவன் பயன்படுத்துவார். எந்த சோதனையும் இனிமையாக இருக்காது என்றாலும், அது கர்த்தருடைய கரத்திலே இருக்கும்போது, அது அதன் நோக்கத்தை

நிறைவேற்றும் எனவும், நாம் அதற்கான பெலத்தை பெற்றுக்கொள்வோம் என்றும் உறுதியாக இருக்கலாம்.

## பரிபூரண பலி

எபிரேயர் 2:17-18 வசனங்களில், நம்முடைய பாவங்களுக்கு நிவாரணமாகும்படி ஆண்டவர் இயேசு எல்லாவற்றிலும் நம்மை போல ஆக்கப்பட்டார் என்று எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் கூறுகிறார்.

> அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராய் இருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராய் இருக்கிறார் (எபிரேயர் 2:17-18).

வசனம் 18ல் அவர் சோதிக்கப்பட்டபோது பாடுபட்டதாக கூறுவதை கவனியுங்கள். நீங்களும் நானும் சந்திக்கும் அனைத்து சோதனைகளையும் அவர் எதிர்கொண்டார். நம்முடைய வாழ்க்கையில் அனுபவிக்கும் அனைத்து வேதனைகளையும் அவர் உணர்ந்தார். அவரும் அவருடைய மனித இயல்பினாலே போராடினார். அவரும் நம்மை போலவே இருந்து, நம்முடைய போராட்டங்ளையும் புரிந்துகொண்டதால், பிரதான ஆசாரியராக அவர் நமக்கு பரிபூரண பிரதிநிதியாக இருக்கிறார். அவர் தன்னுடைய வாழ்க்கையை பலியாக முன்வைத்தபோது, நம்முடைய பெலவீனங்களை அவர் முழுமையாகவும், பரிபூரணமாகவும் புரிந்துகொண்டார். இருப்பினும், ஜெயம்கொண்ட ஒரே ஒருவராக அவர் அவ்வாறு செய்தார். நாம் எதிர்கொண்ட அனைத்தையும் அவரும் எதிர்கொண்டார், ஆனால் பாவமில்லாதிருந்தார். பரிபூரண பலி அவரே.

அந்த நாற்பது நாட்களில் இயேசு சந்தித்த அந்த சோதனைகள் நம்முடைய போராட்டங்களை புதிய வழியில் புரிந்துகொள்ள உதவியது என்று நான் நினைக்கிறேன். நம்முடைய சோதனைகளையும், போராட்டங்களையும் புரிந்து கொண்டவராக அவர் ஊழியம் செய்வார். பரிபூரணமாக நம் மோடு அடையாளப்படுத்திக்கொள்பவராக அவர் தன்னுடைய வாழ்வை பலியாக ஒப்புவிப்பார். இயேசு நம்மை புரிந்து கொள்கிறார் என்பது எவ்வளவு உற்சாகம் அளிக்கின்றது. அவர் பரிபூரணமாக இருப்பதால் மட்டும் அவருடைய பரிபூரண மானது அல்ல, மாறாக அவர் நம்மையும் நம்முடைய பெலவீனங்களையும் முழுமையாக புரிந்துகொள்வதாலும் தான்.

## நம்முடைய பெலவீனங்களுக்காக பரிதவிப்பு

சோதனையின் மீது கிறிஸ்துவுக்கு கிடைத்த வெற்றி மட்டுமே அவரை நம்முடைய பரிபூரண பலியாக மாற்றுவது இல்லை, மாறாக நம்முடைய பெலவீனங்களுக்காக பரிதவிக்கிற பிரதான ஆசாரியராகவும் மாற்றுகின்றது.

> நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாலீஜீயரே நமக்கிருக்கிறார்.
>
> ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரேயர் 4:15-16).

எபிரேயர் 4:16 வசனத்திலே இந்த சத்தியத்தின் நடைமுறை செயல்பாட்டை கவனியுங்கள். கிறிஸ்து நம்முடைய பெலவீனங்களை புரிந்துகொள்வதால், நாம் அவரை அணுகி நமக்கு தேவை ஏற்படும் காலத்திலே கிருபையையும், இரக்கத்தையும் கண்டுபிடிக்கும் தைரியத்தை

பெற்றுக்கொள்கிறோம். நான் சிறுவனாக இருந்த காலம் முதலாகவே, நான் மனச்சோர்வு மற்றும் பயம் ஆகிய மனநோயினால் போராடிக்கொண்டு இருந்தேன். பல ஆண்டுகளாக தேவனுடைய பெலத்தை கொண்டு தேவன் எனக்கு கொடுத்த அழைப்புக்கு தடையாக இல்லாதபடி இவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை புரிந்துகொண்டேன். என்னுடைய ஊழியத்தின் பாதையிலே, இதே போன்ற நோயினால் பாதிக்கப்படவர்களிடம் பேசுவதற்கு கர்த்தர் எனக்கு கதவை திறந்துகொடுத்தார். இதை எதிர்கொள்ளாத மக்கள் செய்ய முடியாத அளவுக்கு, அவர்கள் எதை சந்திக்கிறார்கள் என்பதை புரிந்துகொண்டு, அவர்களுக்கு உதவி செய்வது எப்படி என்பதை நான் அறிந்திருந்தேன். உண்மையில், நான் புரிந்துகொள்வேன் என்பதையும் நான் அவர்களுக்காக பரிதபிப்பேன் என்றும் அறிந்திருந்ததால் அவர்களுடைய மனநோயை பற்றி அவர்களால் என்னிடம் தைரியமாக பேச முடிந்தது.

வனாந்தரத்திலே இயேசு பிசாசின் சோதனைகளை சந்தித்தபோது, உங்களுக்கும் எனக்கு வல்லமையோடும், கரிசனையோடும் ஊழியம் செய்வதற்காக பிதாவானவர் அவரை ஆயத்தம் செய்தார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். சோதனைகளோடும், போராட்டங்களோடும் அவருக்கு இருந்த அனுபவம், நம்மோடு முழுமையாக அடையாளப் படுத்திக்கொள்ள அவருக்கு உதவியாக இருந்தது. நாம் எவ்வாறு உணர்கிறோம் என்பதை சரியாக புரிந்துகொண்ட ஒருவரை நாம் அணுக முடியும் என்பதை அறிந்துகொள்வது அற்புதமான காரியம்.

நாற்பது நாட்கள், பரிசுத்த ஆவியினால் நிறைந்த இயேசு, பிசாசினால் வனாந்தரத்திலே சோதிக்கப்பட்டார். இது நமது ஆண்டவருக்கு கடினமான ஒரு காலகட்டம். அந்நாட்களில் அவர் மீது தன்னால் முடிந்த எல்லாவற்றையும் சாத்தான் கட்டவிழ்த்து விட்டிருப்பான் என்று நாம் உறுதியாக கூறிவிடலாம். இயேசு

அதை சகித்து, சாத்தானை வென்றார். இப்போது அவர் பரலோகத்திலே பிரதான ஆசாரியராக அமர்ந்திருந்து, நமக்காக ஜெபித்தும், பரிந்துபேசிக்கொண்டும் இருக்கிறார்.

> தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபிரேயர் 7:25)

நாள்தோறும், நமக்காக இயேசு பிதாவிடம் கதறி அழுகிறார். நமக்காகவும், நம்முடைய வெற்றிக்காகவும் அவர் வைத்திருக்கும் வாஞ்சை முடிவதே இல்லை. பிதாவுக்கு முன்பாக அவர் தொடர்ந்து ஜெபித்தும் பரிந்து பேசிக்கொண்டும் இருக்கிறார். நம்மை போலவே சோதிக்கப்பட்டு, பாடு அனுபவித்ததால் அவர் நம்மை பரிபூரணமாக புரிந்து கொள்கிறார். இயேசு உலகத்தில் தன்னுடைய ஊழியத்தை தொடந்தபோது, தேவன் விரும்பிய ஊழியராக இருப்பதற்கு வனாந்தரத்திலே அவர் சந்தித்த சோதனைகள் அவரை ஆயத்தப்படுத்தின.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

- ஆவியினால் நிறைக்கப்படுவது என்றால் என்ன? ஆவியினால் நிறைக்கப்படுவதற்கு தடையாக இருப்பவை எவை?

- ஆவியில் நிறைவதால் நாம் போராட்டங்கள் இல்லாமல் இருக்க முடியுமா? ஆவியானவர் இயேசுவை எங்கே வழிநடத்தினார்?

- லூக்கா 4 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயேசுவின் சோதனைகளுக்கான நோக்கம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

• உங்களை பெலப்படுத்துவதற்காகவும், சிறப்பான நற்செய்தி ஊழியராக இருப்பதற்கு உங்களுக்கு உதவுவதற்காகவும் உங்கள் வாழ்க்கையில் சோதனைகளையும் கஷ்டங்களையும் தேவன் எவ்வாறு பயன்படுத்தி இருக்கிறார்?

## ஜெபிப்பதற்காக:

• உங்களை பரிசுத்த ஆவியினால் நிரப்பும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆவியை முழுமையாக அனுபவிக்க தடையாக இருக்கும் காரியங்களை அவரிடம் ஒப்புக்கொடுக்க ஒரு கணம் செலவிடுங்கள்.

• உங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் காரியங்களின் மூலமாக உங்களை பெலப்படுத்தும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். நீங்கள் கற்றுக்கொள்ளும்படி அவர் கொடுத்த அனைத்தையும் கற்றுக்கொள்வதற்காக உங்கள் பாடுகள் அனைத்திலும் விசுவாசமாக இருப்பதற்கு கிருபை அருளும்படி தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

• ஆண்டவர் இயேசு உங்களை பரிபூரணமாக புரிந்து கொள்வதற்காக நன்றி செலுத்துங்கள். உங்கள் பாவத்திற்கு பரிபூரண பலியாக அவர் இருப்பதற்காகவும் நன்றி செலுத்துங்கள். உங்களுக்காக பரலோகத்திலே பிதாவுக்கு முன்பாக அவர் தொடர்ந்து பரிந்துபேசுவதற்காகவும் அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

• உங்களை பெலப்படுத்தி, மென்மேலும் அவருக்கு நெருக்கமாக நீங்கள் வருவதற்கும், அவருக்கு மேன்மையான ஊழியத்தை செய்வதற்கு உங்களுக்கு சம்பவிக்கும் அனைத்தையும் பயன்படுத்துகின்ற கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.

# 2

# அவர் எதுவும் சாப்பிடவில்லை

> ... அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. (லூக்கா 4:2 பிற்பகுதி)

முந்தைய அத்தியாயத்திலே இயேசு பரிசுத்த ஆவியினால் வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டு, நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்டதை குறித்து நாம் பார்த்தோம். இரண்டாம் வசனத்தின் கடைசி பகுதி சொல்வதை கவனியுங்கள்:

> அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. (லூக்கா 4:2 பிற்பகுதி)

இந்த வேதபகுதியில் இருந்து பல விவரங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

முதலாவதாக, இயேசு பசியாயிருந்தார் என்பதை கவனியுங்கள். பல நாட்கள் உணவின்றி இருந்த உடலின் இயல்பான செயல்பாடு இது. இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தபோதிலும், அவர் மனிதனாகவும் இருந்தார். நாம் அனுபவிக்கும் பாடுகளை அவரும் அனுபவித்தார், நாம் உணர்கின்ற வேதனைகளை அவரும் உணர்ந்துகொண்டார். நாற்பது நாட்கள் இந்த மாம்சத்திலே ஆண்டவர் இயேசு சாத்தானை எதிர்கொண்டார், நமக்கு ஏற்பட்ட அதே சோதனைகளினால் அவரும் சோதிக்கப்பட்டார். "அந்த நாட்கள்

முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று" என்கிற வாக்கியம் நமக்கு ஒரு நினைவூட்டியாக இருக்கின்றது.

கிறிஸ்துவின் மனிதத்தன்மை நம்மை போலவே மனித உடலில் நாற்பது நாட்கள் அவர் சாத்தானோடு போராடினார்.

இரண்டாவதாக, லூக்கா 4ல் பதிவுசெய்யப்பட்டுள்ள சோதனைகளின் சமயோஜித்தன்மையின் உணர்வை வசனம் 2 வெளிப்படுத்துகின்றது. நாற்பது நாட்கள் இயேசு எதுவும் சாப்பிடவில்லை, அதன் இறுதியில், அவர் மிகவும் பசியாக இருந்தபோது, பிசாசு அவரிடம் வந்து, இந்த கடைசி மூன்று சோதனைகளை கொடுத்தான் என்று நமக்கு கூறப்படுகின்றது. இதில் இருந்து லூக்கா 4 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப் பட்டவை மட்டுமே, அந்த நாற்பது நாட்களில் இயேசு சந்தித்த சோதனைகள் அல்ல என்பது போல தோன்றுகிறது. சத்துருவோடு இந்த கடுமையான போராட்டத்திலே, அந்த சோதனைகள் ஒரு பகுதி மட்டுமே.

மூன்றாவதாக, சாத்தானின் இறுதி தாக்குதலின் சமயத்தை நாம் கவனிக்க வேண்டும். இயேசு பசியாக இருக்கிறார் என்பதையும், உடல்ரீதியாக பெலவீனமாக இருக்கிறார் என்பதையும் அவன் அறிந்திருந்தான். இந்த உடல் பெலவீனத்தின் சமயத்தில் தான் பதிவுசெய்யப்பட்ட மூன்று சோதனைகளில் முதலாவது சோதனையோடு சாத்தான் வந்தான்.

சாத்தானுக்கு நம்முடைய பெலவீனங்கள் என்னவென்று தெரியும், அந்த பெலவீனங்களின் மீது அவன் முழு கவனம் செலுத்துவான் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். அவனுடைய அம்பை எய்துவதற்கு அவன் சரியான தருணத்தை எதிர்பார்த்து இருப்பான்.

ஒரு சங்கிலியின் பெலவீனமான இணைப்பின் வலிமையே, சங்கிலியின் உண்மையான பெலன் என்று வழக்கச் சொல் இருக்கின்றது. ஒரு சங்கிலியின் மற்ற இணைப்புகள் எவ்வளவு

வலிமையாக இருந்தாலும், அந்த சங்கிலியில் ஒரு பெலவீனமான இணைப்பு இருந்தாலும், அது உடைந்துவிடும். அதை தான் சாத்தான் எதிர்பார்க்கிறான். நம்முடைய கர்த்தராகிய ஆண்டவம் மீது நமக்கு இருக்கும் அர்ப்பணிப்பிலே உள்ள பெலவீனமான இணைப்புகளை நாம் பலப்படுத்த வேண்டும். கர்த்தருக்கும், அவருடைய பணிக்கும் ஒப்புவிக்கப்படாத எந்த பகுதியையும் நாம் நம்முடைய வாழ்க்கையிலே வைத்திருக்க கூடாது.

இந்த வேதபகுதியை குறித்து நாம் கருத்தில்கொள்ள வேண்டிய இறுதி குறிப்பு ஒன்று இருக்கிறது:

> “அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று.”

இந்த வேதபகுதி ஒரு கேள்வியை எழுப்புகின்றது: அத்தனை நாட்களும் இயேசு உணவு சாப்பிடாமல் இருக்க வேண்டிய அவசியம் என்ன? உபவாசம் என்னும் தலைப்பை குறித்து பல புத்தகங்கள் எழுதப்பட்டு இருக்கின்றன, இதை குறித்து விரிவாக விவாதிப்பது நம்முடைய நோக்கம் அல்ல. இருப்பினும், இந்த வேதபகுதியோடு தொடர்பு உடைய சில காரியங்களை கூறுவது உதவியாக இருக்கலாம்.

திருச்சபை வரலாறு முழுவதுமாக, கர்த்தரிடம் இருந்து யாரேனும், எதையாகிலும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால், அவர்கள் பாடு அனுபவிக்க வேண்டும் அல்லது, எதையாகிலும் அதற்கு பதிலாக செலுத்த வேண்டும் என்று நம்பியவர்கள் இருந்தார்கள். ஆண்டவர் அவர்களுடைய பாவத்தை மன்னிக்க வேண்டும் என்று உறுதிப்படுத்துவதற்கான முயற்சியில் தங்களையே சிலர் அடித்துக்கொண்டனர். மற்றும் சிலர், கர்த்தருடைய கவனத்தை பெற்றுக்கொள்வதற்காக தங்கள் மீது எல்லா வகையான வேதனைகளையும் ஏற்றுக்கொண்டனர். மேலும் சிலர், தங்களுடைய ஜெபத்திற்கு அவர் பதிலளித்தால் அவருக்கு ஒரு மகத்தான பலியை

செலுத்துவதாக அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட வகையில் பணிவிடை செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

தேவன் பலியை ஏற்றுக்கொள்கிறார் என்பது உண்மை என்றாலும், உபவாசம் என்பது இதற்கானது அல்ல. கர்த்தருடைய பிரியத்தை பெற்றுக்கொள்வதற்காக நம்மை நாமே அடித்துக்கொள்வதோ அல்லது உடல்ரீதியான அல்லது உணர்வுரீதியான வலியை ஏற்றுக்கொள்வதோ தேவை இல்லை. அவருடைய கிருபையை அவர் விருப்பத்தோடும், இலவசமாகவும் அளிக்கிறார். அவருடைய பிரியத்தை பெற நாம் உழைக்க வேண்டிய அவசியம் இல்லை.

நாற்பது நாட்கள் இயேசு வனாந்திரத்திலே செலவிட்ட போது, தேவனுடைய பிரியத்தை சம்பாதிப்பதற்காக அவர் உபவாசிக்கவில்லை. அவர் தண்ணீரில் இருந்து வெளியேறியபோது, பிதாவானவர் இந்த வார்த்தைகளை பேசினார்:

> "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்." *(மத்தேயு 3:17)*

பிதாவின் பிரியம் அவர் மீது முன்பே இருந்தது என்பதில் சந்தேகமே இல்லை.

வல்லமையை பெற்றுக்கொள்வதற்காக இயேசு உபவாசிக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வனாந்தரத்திற்கு சென்றபோது அவர் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தார் என்று லூக்கா 4:1 கூறுகின்றது. சத்துருவை எதிர்கொள்வதற்கான தேவனுடைய வல்லமை அனைத்தும் முன்பே அவரிடம் இருந்தன. அதிகமான வல்லமையை பெற்றுக்கொள்வதற்காக அவர் பசியினால் தன்னை வதைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அப்படியானால், ஆண்டவர் எதற்காக சாப்பிடாமல் இருக்க தீர்மானித்தார்? நாற்பது நாட்கள் வனாந்தரத்திலே இயேசு என்ன செய்துகொண்டு இருந்தார்? எனக்கு தோன்றுவது

என்னவெனில் ஆண்டவர் இயேசு தன்னை முழுவதுமாக பிதாவின் கரத்திலே ஒப்புவிக்கிறார். அந்த நாற்பது நாட்களும், அவர் தன் உடலையும், மனதையும், சித்தத்தையும் பரலோக பிதாவின் பொறுப்பிலே ஒப்படைத்தாரே. பெலத்தையும், ஞானத்தையும் பெற்றுக்கொள்ள அவருடைய தைரியமும், நம்பிக்கையும் பிதாவின் மீது மட்டுமே இருந்திருக்கும்.

பிரச்சனையை சந்திக்கும் போது நாம் இயல்பாகவே சுயமாக நடவடிக்கை எடுப்போம். நம்முடைய சுய அனுபவத்தையும், ஞானத்தையும் நாம் சார்ந்துகொள்வோம். நம்முடைய ஆள்பலத்தை அதிகரிப்போம். நம்மோடு நிற்கும்படி நம் நண்பர்களையும், உறவினர்களையும் அழைப்போம்.

இருப்பினும், ஒரு குழந்தை அச்சத்தை ஏற்படும் ஒன்றை எதிர்கொள்ளும்போது அது என்ன செய்யும்? அது உடனடியாக தன்னுடைய தாய் அல்லது தந்தையிடம் ஓடிச் சென்று, அவர்கள் அதை பார்த்துக்கொள்ளும்படி செய்யும் அல்லவா? உண்மையான உபவாசம் என்பது இது தானே?

நாற்பது நாட்கள் உபவாசம் என்பது ஆண்டவர் இயேசுவுக்கு கடினமானது என்பதில் சந்தேகமே இல்லை. தனக்கு முன்பாக வரவிருந்த கடுமையான போராட்டத்தை எதிர்கொள்வதற்காக, அவர் தன்னை முற்றிலுமாக தேவனுடைய கரத்திலே ஒப்புவித்தார். அவர் எதை உண்ணப்போகிறார் என்பதை குறித்தோ, மற்ற உலக காரியங்களை குறித்தோ தன்னை வருத்தப்படுத்திக் கொள்ளவில்லை. ஒரு குழந்தையை போல, ஆண்டவர் இயேசு தன் பிதாவை பற்றிக்கொண்டார், இந்த மகத்தான தேவையின் காலத்தில் அவருடைய கவனிப்பையும், கொடையையும், உறுதியாக நம்பினார். இந்த அமைதியான தைரியத்திலே வெற்றி நிச்சயம் கிடைக்கும். சாத்தான் ஒன்றன் பின் ஒன்றாக எய்த அம்புகள் அனைத்திலும், பிதாவிடம் இருந்து தன்னுடைய பெலத்தை

பெற்றுக்கொண்டார். முழுமையாக சார்ந்திருத்தல் மற்றும் நம்பிக்கையின் காட்சி இது.

நாம் நடவடிக்கை எடுப்பதற்கு என்று ஒரு காலம் உண்டு. தேவனிடம் நம்மையே அர்ப்பணிக்க வேண்டிய காலமும் ஒன்று உண்டு. நம்மை நாமே பெலப்படுத்திக்கொள்ள வேண்டிய காலம் ஒன்று உண்டு.

உலக கவலைகளில் இருந்து விலகி இருக்க வேண்டிய காலமும் ஒன்று உண்டு. இது உடல்ரீதியான பெலன் தேவைப்படும் காலம் அல்ல. இயேசுவின் போராட்டம் ஆவிக்குரிய போராட்டம், இதில் ஆவிக்குரிய பெலனே தேவைப்பட்டது. அந்நாட்களில், பிதாவின் சித்தத்திலும், பராமரிப்பிலும் ஓய்ந்திருக்கவே ஒவ்வொரு தருணத்திலும் கவனம் செலுத்தப்பட்டது. சாத்தானால் சோதிக்கப்படும் போது, தொடர்ந்து பிதாவின் சித்தத்தை ஆண்டவர் இயேசு நாடியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. பிதாவிலும் அவருடைய சித்தத்திலும் நிலைந்திருக்க வேண்டும் என்பதற்காகவே இங்கே ஒவ்வொரு முயற்சியும், கவனமும் செலுத்தப்படுகின்றது.

சாத்தானோடு கடுமையாக போராடுகின்ற நாட்கள் இவை என்றாலும், பிதாவோடு நெருங்கிய தொடர்பில் இருக்கக்கூடிய நாட்களும் இவை தான் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்

. அந்நாட்களில் பிதாவின் சித்தத்தை செய்வது மட்டுமே அவருடைய “உணவு”ஆக இருந்தது. பிதாவில் நிலைத்திருக்க வேண்டும் என்கிற அவருடைய அர்ப்பணிப்பிலே மேற்கொள்வதற்கான அவருடைய வல்லமையும் அடங்கி இருந்தது. இந்நாட்களில் தேவைப்படுவது உடல்ரீதியான வலிமை அல்ல. அவருடைய உடலை குறித்த கவலையும், அக்கறையும் ஒரு கவனச்சிதைவாக மட்டுமே இருந்தன.

இன்று, இவற்றை குறித்து சிந்தித்துக்கொண்டு இருக்கும்போது, என்னுடைய பெலன் மெய்யாகவே ஆண்டவரிடத்தில் இருக்கின்றதா? அல்லது என்னிடத்தில்

இருக்கிறதா? என்று கேட்டுக்கொள்கிறேன். இயேசு அந்நாட்களில் அர்ப்பணித்தது போலவே நானும் என்னை அர்ப்பணிக்க முடியுமா? ஒரு குழந்தை தன் தகப்பனை நம்பி அவரிடம் ஓடுவதை போல, நானும் அவரை மட்டுமே நம்பி அவரிடம் ஓடிச் செல்ல முடியுமா? நம்முடைய பரலோக தந்தையிடம் சென்று, நம்முடைய முழு பெலத்தினாலும் அவரை பற்றிக்கொண்ட காலங்கள் நம் வாழ்க்கையில் இருந்தது இல்லையா?

ஆம், ஆண்டவர் தனது பரிசுத்த ஆவியை நமக்கு கொடுத்து இருக்கிறார். போருக்காக நம்மை ஆயுதம்தரிப்பித்தும், பெலப்படுத்தியும் இருக்கிறார். நான் அவரிடம் ஓடிச் சென்று இவ்வாறாக கூற வேண்டிய காலங்கள் என்னுடைய வாழ்க்கையிலும் இருந்தன: " அப்பா, நீர் எனக்கு வேண்டும். இப்போது என் வாழ்க்கையிலே மற்ற எதை காட்டிலும் உம்முடைய பெலனே எனக்கு அதிகமாக தேவைப்படுகின்றது. என்னை பற்றிக்கொண்டு, இந்த வாழ்க்கையின் புயலிலே என்னை பாதுகாக்க நீர் எனக்கு தேவை. உதவிக்காக உமது கரத்திற்குள்ளே நான் ஓடி வருகிறேன்."

இயேசுவே தேவனுடைய குமாரன் என்பதை நான் அறிவேன். அவர் தேவ ஆவியினால் நிறப்பப்பட்டவர் என்பதை நான் அறிவேன். கடுமையான சோதனையும் வேதனையும் நிறைந்த இந்த தருணத்திலே,அவர் பிதாவிடத்திற்கு ஓடிச் சென்று அவரையும் அவருடைய சித்தத்தையும் பற்றிக்கொண்டார் என்பதையும் நான் அறிவேன். பாதுகாப்புக்காக அவர் தன்னுடைய பிதாவையே சார்ந்து இருந்தார். அவர் ஞானத்தின் ஆவியை சார்ந்து இருந்தார். பிதாவும், ஆவியானவரும் இல்லாமல் அவர் தனித்து செயல்படவில்லை. அலுவல் நிறைந்த வாழ்க்கையின் மத்தியிலே, இயேசு பிதாவோடு தனியே நேரம் செலவிட்டார்.

(மத்தேயு 14:23 பார்க்க) குற்றவிசாரணையையும், சிலுவையில் அறைதலையும் எதிர்கொண்டபோது, ஆண்டவர்

*இயேசு பிதாவின் முன்னிலையிலே போராடி, அவருடைய சித்தம் நிறைவேறும்படி கதறி அழுதார் (மத்தேயு 26:42). அந்த நாற்பது நாட்களில், ஆண்டவர் இயேசு உணவு உட்கொள்ளவில்லை. இது அவருடைய கவலை இல்லை. மாறாக, அவர் தன்னை உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், ஆவிக்குரியவிதமாகவும் முற்றிலுமாக பிதாவிடத்தில் அர்ப்பணித்து, அவருடைய சித்தத்தையும், வழிநடத்துதலையும், பாதுகாப்பையும் நாடினார்.*

## கருத்தில்கொள்ள வேண்டியவை :

- *கிறிஸ்து பசியினால் அவதிப்பட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன? இது கிறிஸ்துவை குறித்தும் வனாந்தரத்திலே பிசாசின் சோதனைகளை அவர் எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை குறித்தும் இது என்ன கூறுகின்றது? இது உங்களுக்கு என்ன ஊக்கத்தை அளிக்கின்றது?*

- *நம்முடைய ஆவிக்குரிய சங்கிலியில் உள்ள பெலவீனமான இணைப்புகளை பெலப்படுத்த வேண்டியதன் அவசியம் என்ன? பிசாசு நம்முடைய பெலவீனங்களை தனக்கு சாதகமாக எவ்வாறு பயன்படுத்திகொள்கிறான்?*

- *உபவாசத்தின் குறிக்கோள் என்ன? நம்முடைய பெலத்தின் ஆதாரத்தை உபவாசம் எவ்வாறு நமக்கு நினைவூட்டுகின்றது?*

- *ஆவியினால் நிறைந்தவர்கள், பாதுகாப்புக்காகவும், பெலத்திற்காகவும் தொடர்ந்து பிதாவை சார்ந்து இருக்க வேண்டுமா? விவரிக்கவும்.*

- *எப்போது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும், எப்போது கர்த்தரிடம் சென்று அவருக்காக காத்திருக்க வேண்டும் என்பதும் நமக்கு எப்படி தெரியும்?*

## ஜெபிப்பதற்காக:

- அவருடைய உடலிலே பாடு அனுபவிப்பது என்றால் என்ன என்பதை நமது ஆண்டவர் புரிந்துகொள்வதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவர் சுய விருப்பத்தோடு உங்களுக்காக பாடுபட்டதால் அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

- அவருடைய பிரியத்தை நாம் அறிந்திருப்பதற்காகவும், அந்த பிரியத்தை அறிந்துகொள்வதற்காக பாடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்.

- உங்கள் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் செயலினாலே ஆண்டவர் கொடுக்கும் வல்லமைக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

- ஒரு கணப்பொழுதை எடுத்துக்கொண்டு, போராட்டங்கள் கலங்கடிப்பதை போல தோன்றும்போது பாதுகாப்புக்காகவும் வழிநடத்துதலுக்காகவும் அவரிடம் நீங்கள் ஓடிச் செல்ல முடியும் என்பதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.

# 3

# கல்லை அப்பமாக மாற்றுதல்

அப்பொழுது பிசாசு அவரை நோக்கி:

*நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்த கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (லூக்கா 4:3-4)*

நாற்பது நாட்கள் உபவாசத்திற்கு பிறகு லூக்கா 4ல் பதிவுசெய்யப்பட்டுள்ள முதல் சோதனையோடு சாத்தான் வந்திருக்க வாய்ப்பு உள்ளது. இந்த வார்த்தைகளின் மூலமாக பிசாசு தன் சோதனையை தொடங்கினான் என்பதை கவனியுங்கள்: "நீர் தேவனுடைய குமாரனேயானால்." இது பிசாசை குறித்தும் அவனுடைய வழிமுறைகளை குறித்தும் நமக்கு சில காரியங்களை கூறுகின்றது.

ஏதேன் தோட்டத்திலே, சாத்தான் ஏவாளை சோதித்த போது இந்த வார்த்தைகளின் மூலமாக தன்னுடைய உரையாடலை அவன் தொடங்கினான்:

*"நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" (ஆதியாகமம் 3:1)*

தேவனுடைய வார்த்தையில் உள்ள உண்மையையும், கிறிஸ்துவில் நாம் யாராக இருக்கிறோம் என்பதிலும் சந்தேகத்தை ஏற்படுத்துவது சத்துருவின் தெளிவான

திட்டங்களில் ஒன்றாகும். லூக்கா 4:1ல் அவன் இயேசுவிடம் இந்த முறையை தான் கையாளுகிறான். "நீர் தேவனுடைய குமாரனேயானால்" என்கிற வாக்கியம் உண்மையில் இயேசு யார் என்பதில் சந்தேகம் இருப்பதாக வலியுறுத்துகின்றது. நிச்சயமான ஒரு காரியம் என்னவென்றால், சாத்தானுக்கும் அவனுடைய பிசாசுகளுக்கும் இயேசுவே தேவனுடைய குமாரன் என்பது நன்றாக தெரியும் என்பது தான். மாற்கு 3:9 -12ல் பிசாசுகள் கூறும் பதிலை கவனியுங்கள்:

> அவர் அநேகரைச் சொஸ்தமாக்கினார். நோயாளிகளெல்லாரும் அதை அறிந்து அவரைத் தொடவேண்டுமென்று அவரிடத்தில் நெருங்கி வந்தார்கள்... அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து: "நீர் தேவனுடைய குமாரன்" என்று சத்தமிட்டன. தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவைகளுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

மாற்கு 5:1-7 வசனங்களில் கதரேனருடைய நாட்டிலே பிசாசு பிடித்த ஒரு மனிதனை இயேசு சந்தித்தபோதும் இதே காரியம் சம்பவித்தது:

> பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான்; அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து,

அவரைப்பணிந்துகொண்டு: இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

கர்த்தர் இயேசுவுக்கு இந்த அசுத்த ஆவிகள் பயந்தன. அவர் உன்னதமான தேவனுடைய குமாரன் என்பதை அவை அறிந்திருந்தன. அவை அவருக்கு இணையாக இருக்க முடியாது என்பதை, அவை அறிந்து இருந்தன.

கர்த்தர் இயேசுவிடம் பிசாசு பேசியபோது, அவர் தேவனுடைய குமாரன் என்பதை அவன் அறிந்திருந்தான். இயேசு தன்னுடைய அடையாளத்தையும், பதவியையும் சந்தேகிக்க வேண்டும் என்பதே அவனுடைய உள்நோக்கம். கிறிஸ்துவின் மனதிலே அவன் சந்தேகத்தை விதைக்க எண்ணினான். நம்முடைய வாழ்க்கையினுல் ஆண்டவரின் அழைப்யை ஏற்கலாமா என்று சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கு தன்னால் இயன்ற எல்லாவற்றையும் பிசாசு முயற்சி செய்வான். கிறிஸ்துவில் நம்முடைய நிலையையும், வல்லமையையும் புரிந்துகொள்ளாமல் வைத்திருக்க அவன் முயற்சி செய்வான். நம்முடைய மீட்பை குறித்து அவன் கேள்வி எழுப்புவான். தேவனுடைய அன்பை குறித்தும், கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் அதிகாரத்தை குறித்தும் சந்தேகிக்கும்படி அவன் செய்வான்.

தேவனுடைய வார்த்தையின் மீதும், நம்முடைய வாழ்க்கையில் அதற்கு இருக்கும் அர்த்தத்தின் மீதும் ஒரு ஆலோசனை வழங்குகிறான். அவர் தேவனுடைய குமாரனாக இருந்தால், கல்லை அப்பமாக மாறும்படி செய்ய வேண்டும் என்று அவன் ஆலோசனை வழங்கினான். ஒரு கனம் இதை நாம் சிந்தித்து பார்ப்போம். கல்லை அப்பமாக மாற்றுவதில் தவறு ஒன்றும் இல்லை. தேவன் மனிதனை உருவாக்கிய போது, அவனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார் (ஆதியாகமம் 2:7).

அவர் பெண்ணை உருவாக்கிய போது, அவளை ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்றில் இருந்து உருவாக்கினார் (ஆதியாகமம் 2:21-22). தேவன் உருவாக்கிய ஒன்றை, வேறு ஒன்றாக மாற்றுவதற்கு அவருக்கு எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. இயேசு கல்லை அப்பமாக மாற்றுவதில் பாவம் எதுவும் இருக்கப்போவது இல்லை.

கர்த்தர் இயேசுவின் ஊழியத்திலும், அவர் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிப்பதற்கான அற்புதங்கள் பலவற்றை அவர் பயன்படுத்தினார் என்பதை கவனியுங்கள். அவரே தேவனுடைய குமாரன் என்னும் உண்மையை வலியுறுத்து வதற்கான சாட்சிகளாக, தன்னுடைய அற்புதங்களை இயேசு சுட்டிக்காட்டியும் இருக்கிறார். அவர் தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொள்வதற்கு சான்று அளிக்குமாறு கோரிக்கைவிடுத்த அக்கால மதத்தலைவர்களிடம் இயேசு இவ்வாறு கூறினார்:

> யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது. (யோவான் 5:36)

இயேசு செய்த செயல்கள், அவர் பிதாவிடமிருந்து வந்தார் என்றும், பிதாவினால் அனுப்பப்பட்டார் என்றும் சாட்சியம் அளித்தன.

வருகிறவர் அவர் தானா (மேசியா) என்று கேட்பதற்காக இயேசுவிடம் யோவான் ஸ்நானன் தன்னுடைய சீஷர்களை அனுப்பிய சம்பவத்தை நாம் லூக்கா 7 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். லூக்கா 7:21-22 வசனங்களில் யோவானின் சீஷர்களுக்கு இயேச் அளிக்கும் பதிலை கவனியுங்கள்:

> அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய

வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய குமாரன் அவர் தான் என்பதற்கு இயேசு தன்னுடைய அற்புதங்களை சாட்சியங்களாக கூறுவதை கவனியுங்கள்:

யோவான் 10:38ல், அவருடைய நாட்களில் வாழ்ந்த மக்களின் அவிசுவாசத்தை கண்டு எரிச்சல் அடைந்த இயேசு இவ்வாறு கூறினார்:

செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார்(யோவான் 10:38)

இந்த சம்பவங்கள் அனைத்திலும் கர்த்தர் இயேசு பிதாவிடத்தில் இருந்து வந்தார் என்பதையும், அவர் தேவனுடைய குமாரன் என்பதையும் நிரூபிப்பதற்காக தன்னுடைய அற்புதங்களை அவர் பயன்படுத்தினார் என்பதை கவனியுங்கள்.

பிசாசு எதற்காக இயேசுவிடம் கல்லை அப்பமாக மாற்றும்பட கேட்டுக்கொண்டான்? பிசாசின் இந்த வேண்டுகோளுக்கு இணங்கி இருந்தால், இயேசு எத்தகைய பாவத்தை செய்து இருப்பார்? இதற்கு எண்ணற்ற விடைகள் இருக்கலாம்.

இந்த சோதனைக்கு முன்பாக, இந்த வாக்கியம் இருந்ததை

நினைவில்கொள்ளுங்கள்:“நீர் தேவனுடைய குமாரனேயானால்.” இது மிகவும் தனிப்பட்டது. இங்கே கவனம் கிறிஸ்துவின் மீது இருக்கின்றது. அவருடைய குமாரத்துவத்தின் மீது சாத்தான் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றான்.

கேட்டுக்கொண்ட அற்புதத்தினால் யாருக்கும் பயன் அளிக்கப்போவது இல்லை. இயேசு தேவனுடைய குமாரன் என்பதை சாத்தான் முன்பே அறிந்திருந்தான். வனாந்தரத்திலே அவருடைய அற்புதத்தை பார்க்க அங்கு வேறு யாருமே இல்லை. இந்த அற்புதத்தினால் பயனடையக்கூடிய வாய்ப்பு உள்ள ஒரே நபர் கிறிஸ்து மட்டுமே. இதை நிகழ்த்துவதற்கான ஒரே காரணம்தன்னை தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதற்காக மட்டுமே இருக்கும். அவருடைய ஞானஸ்தானத்திற்கு பிறகு பிதாவானவர் கூறியதை சந்தேகித்தால் மட்டுமே இப்படி ஒரு அடையாளத்தை நிகழ்த்த வேண்டிய அவசியம் ஏற்படும்:

> அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 3:17)

பிதா அவரோடு பேசிய வார்த்தைகளின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையை சோதிக்க, இயேசுவின் உடல்ரீதியான பெலவீனத்தையும் பசியையும் சாத்தான் பயன்படுத்தினான். இயேசு பிதாவின் அந்த வார்த்தைகளை கேட்டவுடன், ஆவியில் நிறைந்தவராய், அந்த வார்த்தைகள் அவருடைய மனதிலும் உள்ளத்திலும் இருக்கும்போதே வனாந்தரத்திற்கு அனுப்பப்பட்டார். நாற்பது நாட்களும் அவர் அந்த வார்த்தைகளை பற்றிக்கொண்டு இருந்திருப்பார். ஒன்றன் பின் ஒன்றாக அவருக்கு துன்பங்கள் நேரிட்டன, அந்த வார்த்தைகள் சோதிக்கப்பட்டன.

அதே சமயம் அதே வார்த்தைகள் அவருக்கு ஆறுதலும் அளித்தன. இயேசுவிடம் பிசாசு பேசியதை உங்களால் உணர்ந்துகொள்ள முடியும்: “பிதா உன்னை நேசித்தார் என்றால்,

உனக்கு இது சம்பவிக்க அவர் எவ்வாறு அனுமதித்து இருப்பார்? நீ வனாந்தரத்தில் இருக்கும்போது, உன்னுடைய பிதா எங்கே போனார்? நீ தேவனுடைய குமாரன் என்பதை உண்மையாகவே நம்புகிறாயா?"

கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் நிலையை குறித்து சந்தேகம் ஏற்படுத்துவதில் பிசாசு எவ்வளவும் மகிழ்ச்சி அடைகிறான். தேவனுடைய அன்பை குறித்தும், அவருடைய இருதயத்தில் நமக்கு இருக்கும் இடத்தை குறித்தும் குழப்பத்தை ஏற்படுத்தி, நம்மை சந்தேகிக்கும்படி செய்ய அவன் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறான்.

நம்முடைய மீட்பையும், கிறிஸ்துவில் நமக்கு உண்டான நிலையையும் சந்தேகிக்கச் செய்ய வேண்டும் என்கிற முயற்சியில் அவன் நம்மை துன்புறுத்தி, சோதிப்பான். ஒருபுறம் நம்முடைய கரத்திலே தேவனுடைய வார்த்தையும், மறுபுறம் வாழ்க்கையின் துன்பங்களும் போராட்டங்களும் உடைய நிலையிலே அவன் நம்மை வைப்பான். அதன் பின்னர் நாம் தீர்மானம் எடுக்க வேண்டும். நாம் எதை நம்புவோம்? தேவன் நம்மை கைவிட்டுவிட்டார் என்பதை இந்த சோதனைகள் நிரூபிக்கின்றனவா? நாம் சந்திக்கும் போராட்டங்கள் நம்முடைய விசுவாசம் மெய்யானதுதானா என்று சந்தேகிப்பதற்கு நாம் அனுமதிப்போமா? அல்லது சோதனைகளுக்கும், துன்பங்களுக்கும் நடுவே, தேவன் கூறுவதை நாம் விசுவாசிப்போமா. அந்நேரத்தில் இயேசு இதைத் தான் சந்தித்தார்.

நாற்பது நாட்கள் உபவாசத்திற்கு பிறகு, பிசாசு இயேசுவை சோதித்தான். பிதா கூறியதையும், செய்ததையும் இயேசு மெய்யாகவே விசுவாசித்தால் ஒரு கல்லை அப்பமாக மாற்றுவதன் மூலம் அதை அவர் நிரூபிக்க வேண்டும். இந்த கடினமான நாட்களுக்குப் பிறகும், அவருக்கு பிதாவோடு உள்ள உறவின் மீது நம்பிக்கை இருக்கின்றதா? அன்றைய நாளில் இயேசு சாத்தானிடம் திரும்பி, இவ்வாறு கூறினார்: "மனுஷன்

அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே.''

``என்று எழுதியிருக்கிறதே'' என்பது ஒரு வல்லமையான வாக்கியம். இந்த வார்த்தைகள் பிசாசின் சோதனைகளை வீழ்த்தின. நாற்பது நாட்கள் சோதனையின் நடுவிலே, இயேசு தன்னுடைய பிதாவின் வார்த்தையில் உள்ள சத்தியத்திற்கு திரும்பினார். ஒரு கனப்பொழுது கூட அவருக்கு சந்தேகம் எழவில்லை. ஒரு கல்லை அப்பமாக மாற்றுவதன் மூலம் அவர் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவனுடைய சத்தியமே போதுமானது.

தேவன் இன்று கூறுவதை உங்களால் விசுவாசிக்க முடியுமா? பலரும் தேவனுடைய வார்த்தைக்கு வெளியே பதில்களை தேடுகின்றார்கள். தேவன் கூறுவதை அவர்கள் முழுவதுமாக விசுவாசிக்க மறுக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே சத்துருவுக்கு ஒரு வல்லமையான பாதபடியை அது கொடுக்கின்றது. தேவனுடைய வார்த்தையையும், அதில் கூறப்பட்டவையின் முக்கியத்துவத்தையும் சந்தேகிக்கும்படி செய்துவிட்டால், நாம் வழிவிலகிச் சென்று எந்த ஒரு பொறியிலும் சிக்கிக்கொள்ளும்படி அவன் செய்துவிடுவான்.

முதலாம் சோதனையில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய மற்றும் ஒரு பரிமானமும் இருக்கின்றது. ``நீர் தேவனுடைய குமாரனேயானால்'' என்னும் வாக்கியத்தின் மூலமாக, இந்த கேள்வியின் பின்னணியை நாம் பார்க்க முடியும். ``அவருக்குப் பசியுண்டாயிற்று'' என்னும் வாக்கியத்தின் பின்னணியையும் நாம் கவனிக்க வேண்டும்.

கர்த்தர் இயேசு நம்மை போலவே பசியை அனுபவித்தார். பசி என்பது ஒரு வல்லமையான உந்துசக்தி. பொய் சொல்வதற்கும், திருடுவதற்கும், கொலை செய்வதற்கும் அது மக்களை தூண்டுகின்றது.

நாற்பது நாட்களாக கர்த்தர் இயேசு உணவு உட்கொள்ள

வில்லை. இந்த நாற்பது நாட்களும் அவர், தன்னுடைய உடல்ரீதியான, ஆவிக்குரிய மற்றும் உணர்வுரீதியான தேவைகளை பிதாவிடத்தில் அர்ப்பணித்தார். ஒரு கல்லை அப்பமாக மாற்றுவதன் மூலம் அவருடைய இந்த கடினமான காலகட்டத்தை குறைத்துக்கொள்ளும்படி பிசாசு கூறுகின்றான். இந்த நடவடிக்கையின் மூலமாக தன்னை தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கும்படி கிறிஸ்துவிடம் அவன் கூறுகின்றான். அவன் கூறுவது இதைப் போன்ற ஒரு உரையாடலாக தான் இருந்திருக்கும் : "நீர் தேவனுடைய குமாரனாக இருந்தால், இங்கே ஏன் பட்டினியாக அமர்ந்திருக்கிறீர். இதை குறித்து தாங்கள் ஏன் ஒன்றும் செய்யாமல் இருக்கிறீர்கள்? அந்த கல்லை எடுத்து, உங்கள் பசியை ஆற்றிக்கொள்ளுங்கள். கல்லை அப்பமாக மாற்றும் சக்தி இருக்கும்போது தேவனுடைய குமாரன் ஏன் பசியாக இருக்க வேண்டும்?

இயற்கையின் மீது கர்த்தர் இயேசுவுக்கு அதிகாரம் உண்டு, என்பது உண்மை தான். இருப்பினும், அந்த வல்லமை பிதாவின் சித்தத்திற்கும், நோக்கத்திற்கும், ஆவியானவரின் நடத்துதலுக்கு கீழ்ப்படிவதற்கும் உட்பட்டு இருக்கின்றது. தேவனுடைய ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குள் வழிநடத்திச் சென்றார். இந்த சோதனைகள் முடிந்தவுடனே, ஆவியானவர் அவரை கலிலேயா பகுதிக்கு வழிநடத்த இருக்கிறார் (லூக்கா 4:14 பார்க்க). பிதா மற்றும் ஆவியானவரின் வழிநடத்துதலை அறிந்துகொள்வதே கிறிஸ்துவின் ஆசையாக இருந்தது. பிதாவின் நோக்கத்தை செயல்படுத்துவதை தவிற, மற்ற செயலுக்கு தன் அதிகாரத்தை பயன்படுத்துவதைவிட, பட்டினியாக இருந்துவிடலாம் என்று அவர் தீர்மானித்தார். அன்றைய நாளில் அவர் பிசாசிடம், "மனிதன் அப்பத்தினால் மட்டும் உயிர்வாழ்வதில்லை" என்பதை தெளிவுபடுத்திவிட்டார். வாழ்க்கையிலும் ஊழியத்திலும் உணவையும், வசதியையும் விட முக்கியத்துவம் வாய்ந்தவை பல உண்டு. பிதாவின் சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

இயேசு தேவனுடைய குமாரன். எல்லாவற்றிலும் சிறந்ததை பெற்றுக்கொள்ள அவர் தகுதிவாய்ந்தவர், ஆனால் வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும்விட, பிதாவின் சித்தத்திற்கும், நோக்கத்திற்கும் கீழ்ப்படிந்து வாழவே அவர் விரும்பினார். தன்னுடைய தனிப்பட்ட வசதியைவிட இது அவருக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்த பாடத்தை இன்று நாம் எவ்வாறு படிக்க வேண்டும். தங்கள் வருமானத்தை பெருக்கிக்கொள்ள முடியுமா, அல்லது வேலையில் முன்னேற்றம் அடைய முடியுமா என்பதன் அடிப்படையில் ஒரு சபையின் அழைப்பை ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா என்று தீர்மானிக்கும் போதகர்களை நான் சந்தித்து இருக்கிறேன். அவர்கள் பணிவிடை செய்யும் மக்களின் பாராட்டுக்களை பெறுவதே தங்களுடைய மிகப்பெரிய ஆசையாக வைத்திருக்கும் கிறிஸ்தவ ஊழியர்களை நான் சந்தித்து இருக்கிறேன். மக்களுக்காக தேவன் என்னுடைய இருதயத்திலே வைத்துள்ள வார்த்தைகளை போதிக்காமல் "ஈர்ப்பதற்காக பிரசங்கிக்க" தனிப்பட்ட முறையில் நான் சோதிக்கபட்டு இருக்கிறேன்.

தேவன் நமக்கு கொடுத்த அழைப்பையும், வரத்தையும், அதிகாரத்தையும் நமக்காகவே நாம் பயன்படுத்திக் கொள்வோமா? "வசதிகளினால் மாத்திரம் மனிதன் வாழ்வதில்லை" என்பதை உண்மையாக புரிந்துகொண்ட மக்களை தேவன் தேடிக்கொண்டு இருக்கிறார். அவரையும் அவருடைய வார்த்தையையும் பின்பற்ற தன்னை அர்ப்பணிக்கிறவர்களை அவர் தேடிக்கொண்டு இருக்கிறார்.

முதலாவது பதிவுசெய்யப்பட்ட சோதனையை இயேசு சந்தித்தபோது, தேவன் அவரிடம் பேசிய வார்த்தையை சந்தேகிக்கும்படி அவர் சோதிக்கப்பட்டார். தேவனுடைய குமாரன் என்கிற நிலையை ஒரு பொறுப்பாக கருதாமல், பாக்கியமாக கருத வைக்க வேண்டும் என்பதற்காகவே அவர் சோதிக்கப்பட்டார். அவர் தேவனுடைய குமாரன், அது

அதிகாரமும் வல்லமையும் நிறைந்த பதவி. அந்த பாக்கியம் நிறைந்த பதவி அவருக்கு மகத்தான பொறுப்பையும் அளித்தது. இதை விட தீவிரமாக வேறு எந்த பொறுப்பும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. தேவனுடைய குமாரன் என்னும் சலுகைகள் அனைத்தையும் அவர் தனக்கென்று எடுத்துக் கொள்ளாமல், தன்னை முற்றிலுமாக அவர் பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்தார். தன்னுடைய சொந்த சௌகரியங்களை அவர் கடமையின் காரணமாக தியாகம் செய்தார். பிதாவின் சித்தத்தை செய்வதற்காக அவர் கல்லை அப்பமாக மாற்ற மறுத்தார்.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

• கல்லை அப்பமாக மாற்றுவதன் பின்னால் இருக்கும் பாவம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

• கிறிஸ்துவுக்குள் உங்கள் நிலை, உங்கள் ஊழிய அழைப்பு அல்லது ஆவியானவரின் நடத்துதலை குறித்து

நீங்கள் சந்தேகம் அடையும்படி சத்துரு எப்போதாவது செய்தது உண்டா? விவரிக்கவும்.

• உங்களை சுற்றி இருக்கும் காரியங்கள் கடினமாக இருந்தபோது, தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கும்படி எப்போதாவது நீங்கள் சோதிக்கப்பட்டு இருக்கிறீர்களா? தேவனுடைய வார்த்தையை விட்டுவிலகி இணங்கிச் செல்லும்படி நீங்கள் எப்போதாவது சோதிக்கப்பட்டது உண்டா?

• உங்கள் பதவியை பொறுப்பைவிடவும், பாக்கியமாக பார்க்கும்படியான சோதனையை என்றாவது உணர்ந்து இருக்கிறீர்களா? நம்முடைய பொறுப்பை காட்டிலும் நம்முடைய பாக்கியத்தின் மீது அதிக கவனமாக இருக்கும்போது என்ன சம்பவிக்கிறது?

• தேவனுடைய ராஜ்யத்திற்காக உங்கள் தனிப்பட்ட வசதிகளை தியாகம் செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

• தேவனுடைய ஆவியானவரின் நடத்துதலுக்கு நம்மையும், நம்முடைய வரங்களையும் அர்ப்பணிப்பதன் முக்கியத்துவத்தை பற்றி இந்த வேத பகுதி நமக்கு என்ன போதிக்கிறது? தேவனுடைய ஆவியானவர் வழிநடத்தாத விதத்திலே உங்கள் நிலையையும், வரங்களையும் பயன்படுத்தும்படி எப்போதாவது நீங்கள் சோதிக்கப்பட்டு இருக்கிறீர்களா?

## ஜெபிப்பதற்காக :

• ஒருக்கணம் எடுத்துக்கொண்டு அவருடைய வார்த்தையின் உண்மைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.

• நாம் எதிர்பார்க்கும்படியாக காரியங்கள் நடைபெறாதபோதும், நீங்கள் விசுவாசமாக இருப்பதற்கு கர்த்தர் பெலத்தை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

• உங்கள் அழைப்பின் பாக்கியத்தை அருளியதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். அந்த அழைப்பை தீவிரமாக எடுத்துக்கொள்ளும் அருளை வழங்கும்படி அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள். அந்த அழைப்பிலே அவர் கொடுத்த பொறுப்பிலே உண்மையோடிருக்க கிருபை அளிக்கும்படி அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

• உங்களுடைய அழைப்புக்கு உங்களையும், ஆவியின் நடத்துதலுக்கு உங்கள் வரங்களையும் அர்ப்பணிக்காத நேரங்களுக்காக கர்த்தரிடம் மன்னிப்பு கேளுங்கள். அவருடைய ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்துவதற்கு பதிலாக உங்களையே உயர்த்திக் கொள்வதற்காக உங்கள் பதவியை பயன்படுத்தியதற்காக உங்களை மன்னிக்கும்படி அவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

# 4

# உயர்வான இடத்திற்கு வழிநடத்தப்படுதல்

*பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து. (லூக்கா 4:5)*

முந்தைய அத்தியாயத்தில் கிறிஸ்துவின் மனதில் அவருடன் பேசிய தேவனுடைய வார்த்தையை குறித்தும், தேவனுடைய குமாரன் என்னும் அவருடைய நிலையை குறித்தும், பிசாசு எவ்வாறு சந்தேகத்தை விதைக்க முயற்சித்தான் என்பதை நாம் பார்த்தோம். தேவனுடைய குமாரன் என்னும் அவருடைய பாக்கியத்தையும் அவருடைய வரங்களையும் அவருடைய சொந்த நோக்கங்களுக்காக பயன்படுத்த வைக்கவும் முயற்சி செய்தான். கிறிஸ்து இந்த சோதனைகளை எதிர்த்து நின்றார், பிதாவின் சித்தத்திற்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து நடக்க தீர்மானித்தார்.

சாத்தானும் விட்டுக்கொடுக்கவில்லை. இந்த முயற்சியில் தோல்வி அடைந்த பிறகு, அவன் மற்றும் ஒரு முயற்சியை மேற்கொண்டான். சத்துரு மிகவும் விடாமுயற்சியுடன் செயல்பட்டான். சில நேரங்களில் இவ்விதமான விடா முயற்சி அவனுக்கு சாதகமாக செயல்படும். தன்னுடைய தொடர்ச்சியான சோதனைகளினாலும், துன்புறுத்தல்களினாலும் கிறிஸ்தவர்களை அவன் சோர்வடையச் செய்கிறான். நாற்பது நாட்களாக அவன் இயேசுவை சோதித்துக்கொண்டு இருக்கிறான் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

அடுத்த சோதனையில், வசனம் 5 கூறும்படியாக பிசாசு கிறிஸ்துவை உயரமான இடத்திற்கு அழைத்துச் சென்று, "உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்தான்".

முதல் முறை பார்க்கும்போது வசனம் 5 அதிர்ச்சியை அளிக்கின்றது. ஆங்கிலத்தில் பிசாசு இயேசுவை வழிநடத்தி சென்றதாக அது கூறுகின்றது. தமிழில் "கொண்டுபோய்" என்று ஏறத்தாழ சரியான வார்த்தையை பயன்படுத்தி இருக்கிறர்கள். இதில் கிறிஸ்து பிசாசுக்கு கீழ்ப்படியும் எந்த ஒரு காரியத்தையும் பார்க்க முடியாது. இயேசு வனாந்தரத்தை விட்டு சென்றதாக எந்த ஒரு அடையாளமும் இல்லை. கிறிஸ்துவை உயரமான இடத்திற்கு கொண்டு போன பின்பு ஒரே நிமிடத்தில் உலகத்தின் ராஜ்யங்கள் அனைத்தையும் பிசாசு காண்பித்ததாகவும் வசனம் கூறுகின்றது. ஒரு உயரமான இடத்தில் இருந்து உலகத்தின் ராஜ்யங்கள் அனைத்தையும் பார்ப்பது எவ்வாறு சாத்தியம்? அதை விட முக்கியமாக, இவை அனைத்தையும் "ஒரே நிமிடத்தில்" எவ்வாறு செய்ய முடியும்? கிறிஸ்துவை ஒரு தரிசனத்திலே பிசாசு சோதிப்பதை போல தோன்றுகிறது.

இந்த தரிசனம் இரவிலே நமக்கு வரும் அர்த்தமற்ற கனவை காட்டிலும் மேன்மையானது போல தோன்றுகிறது. இந்த தரிசனத்திலே பிசாசு கிறிஸ்துவோடு ஒரு பரிமாற்றத்தை செய்ய முயற்சிக்கிறான். இந்த சம்பவங்கள் அனைத்தும் இயலுலகில் நடைபெறவில்லை என்றாலும், நடைபெற்ற உரையாடல் அனைத்தும் உண்மையாகவே சம்பவித்தது. இந்த தரிசனத்திலே அவனுக்கு கீழ்ப்படிந்து இருந்தாலும், சாத்தான் இந்த போரில் வெற்றிபெற்று இருப்பான்.

பிசாசினால் நமக்கு தரிசனங்களையும், கனவுகளையும் கொடுக்க முடியும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அவனுடைய போராட்டம் இயல் உலகம் சார்ந்தது அல்ல. கர்த்தர் இயேசுவிடம் இருந்து நம்முடைய மனதையும்

உள்ளத்தையும் திருப்புவதற்காக அவனால் இயன்ற அனைத்தையும் அவன் செய்வான். நம்முடைய இரவு தரிசனங்களிலும், கனவிலும் கூட அவன் இவ்வாறு செய்வான். "இது வெறும் கனவு தான், அது ஒன்றும் உண்மை இல்லை" என்று கூறுகிறவர்களும் உண்டு. உண்மை என்னவெனில், கனவிலும் நம்முடைய சத்துரு நம்முடைய மனதையும், உள்ளத்தையும் கட்டுப்படுத்த முடியும். ஒரு நாள் தான் கண்ட கனவை குறித்து தேவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டியது பற்றி ஒரு நண்பர் என்னிடம் கூறியது எனக்கு நினைவுக்கு வருகின்றது, ஏனென்றால் அந்த கனவில் அவர் பாவத்திற்கு தன்னை அர்ப்பணித்து இருந்தார்.

பாவம் இருதயத்தில் இருந்து பிறக்கிறது என்று இயேசு மிகவும் தெளிவாக கூறுகின்றார். மத்தேயு 5:27-28 வசனங்களில் அவர் என்ன கூறுகிறார் என்பதை கவனியுங்கள்.

> விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள்.
>
> நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. (மத்தேயு 5:27-28)

தேவனுக்கு முன்பாக குற்றம் உள்ளவராக இருப்பதற்கு நீங்கள் உடல்ரீதியாக பாவம் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாம் பார்க்கும் விதமாக ஆண்டவர் பார்ப்பது இல்லை. நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் அவர் பார்க்கிறார்.

கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியை ஒரு அரசரை தேடும்படி அனுப்பியபோது, வலிமையாகவும், அழகாகவும் இருக்கும் ஒரு நபரை பார்க்கும்படி தீர்க்கதரிசி சோதிக்கப்பட்டார். வெளித் தோற்றத்தை பற்றி தேவன் அதிகமாக அக்கறைப் படுவது இல்லை. 1 சாமுவேல் 16:7 வசனத்தில், அவர் சாமுவேலிடம் இவ்வாறு கூறினார்:

*கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீரவளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். (1 சாமுவேல் 16:7)*

தேவன் நம்முடைய இருதயத்தின் நோக்கங்களை பார்க்கிறார். கொரிந்திய விசுவாசிகளிடம் நம்முடைய இருதயத்தின் யோசனைகளை தேவன் வெளிப்படுத்தும் நாள் வரும் என்று பவுல் நினைவுபடுத்துகிறார்.

*ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள், இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும். (1 கொரிந்தியர் 4:5)*

பல காரியங்கள் வெளிதோற்றத்துக்கு கபடற்றதாக தோன்றலாம் ஆனால், தேவன் இதைக் காட்டிலும் ஆழமாக பார்க்கிறார். நம்முடைய இருதயத்தின் யோசனைகளையும், உள்நோக்கங்களையும் அவர் பார்க்கிறார்.

*மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார். (நீதிமொழிகள் 16:2)*

மனிதர்களாகிய நாம், பார்க்கிற காரியங்கள் மீது கவன்ம் செலுத்துகின்றோம். தேவனுடைய ராஜ்யத்திலே, இவ்வாறு செயல்படுவது இல்லை. நம்முடைய இருதயத்தின் மனப்பாங்குகளும் சிந்தனைகளும் முக்கியமானவை. நம்முடைய நோக்கங்களுக்கும், நம்முடைய மனதின் ரகசியமான இச்சைகளுக்கும் கணக்கு கொடுக்கிறவர்க்ளாக தேவன் நம்மை பார்ப்பார். நம்முடைய மனதையும்,

உள்ளங்களையும் பிசாசின் சோதனைகளுக்கு அர்ப்பணிக்கும்போது, இந்த ரகசிய இடங்களில் அவனோடு நாம் பரிமாற்றங்கள் செய்ய முடியும்.

ஒரு தரிசனத்திலே கிறிஸ்து உயரமான இடத்திற்கு கொண்டு போகப்பட்டார். அந்த உயரமான இடத்திலே, உலகத்தின் ராஜ்யங்கள் அனைத்தையும் பிசாசு கிறிஸ்துவுக்கு காண்பித்தான். அந்த நிமிடத்திலே, உலகம் தரக்கூடிய அனைத்து மகிமையும், இன்பங்களும், செல்வங்களும், வல்லமைகளும் அவருடைய மனதிலே மின்னல் வேகத்தில் ஊடுருவிச் சென்று இருக்கக்கூடும். அதன் பளபளப்புக்கு அவர் தன்னை ஒப்புக்கொடுப்பாரா? அவருடைய மனதும், இதயமும் ஒரு நிமிடமாகிலும் இதன் மீது இச்சை கொள்ளும்படி செய்வாரா?

கர்த்தரோடு விசுவாசமுள்ளவர்களாக நடக்க விரும்பும் அனைவரும், தங்கள் இருதயத்தில் இதே சிந்தனைகளோடும் உள்நோக்கங்களோடும் தொடங்க வேண்டும். சங்கீதம் 139ல் கர்த்தரிடத்தில் கதறி அழுத சங்கீதக்காரர் இதை முற்றிலுமாக அறிந்து இருந்தார்:

> தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும். (சங்கீதம் 139:23-24)

இங்கே தன்னுடைய இருதயத்தையும் சிந்தனைகளையும் சுத்திகரிக்கும்படி ஆண்டவரிடம் மன்றாடிய ஒரு மனிதர் இருக்கிறார். அவருடைய வாழ்வின் கருவில் இருந்தே அவர் தூய்மையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

எரேமியா 4:14 வசனத்தில், கர்த்தர் தன் மக்களுக்காக கதறி அழுவதை கேளுங்கள்:

*எருசலேமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு;*

*எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்?*

தன்னுடைய மக்கள் தங்கள் இருதயத்தின் தீமைகளை கழுவவும், தங்கள் பொல்லாத சிந்தனைகளை அகற்றவும் தேவனுடைய இருதயம் விரும்புவதை கவனியுங்கள். அவர்களுடைய உள்ளங்களையும், அவர்களுடைய மனதின் பொல்லாத சிந்தனைகளையும் அவர் பார்த்தார். இவை அனைத்தும் அவருக்கு எதிரானவை.

தன்னுடைய மக்கள் தங்கள் இருதயத்திலும் , மனதிலும் சுத்திகரிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் ஏங்கினார். இதே போல, ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக தன்னுடைய மக்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு தன்னிடம் திரும்பும்படி கர்த்தர் மன்றாடுகிறார். அவர்களுடைய சிந்தனைகள் தன்னுடைய சிந்தனைகள் அல்ல என்றும் அவர் நினைவுபடுத்துகின்றார்.

*துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்;*

*நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 55:7-8)*

இரண்டாம் சோதனையில் நடைபெறும் போராட்டம், கிறிஸ்துவின் மனதிலே நடைபெறும் போராட்டம். இது நம்முடைய மனதிலே தினந்தோறும் நடைபெறும் போராட்டம். இந்த போராட்டம் இயல்ரீதியானது இல்லை என்றாலும், இது முற்றிலும் உண்மைத்துவம் வாய்ந்தது. உண்மையான

பரிவர்த்தனை மனதிலே நடைபெறுகின்றது. மனதின் உள்ளே ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. காகிதத்தில் எதுவும் எழுதப்படுவதில்லை, ஆனாலும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நம்முடைய வாழ்க்கையின் மீதமுள்ள பகுதிகளை பாதிக்கின்றன.

உங்கள் இருதயத்திலே சாத்தானோடு எவ்விதமான ஒப்பந்தங்களை நீங்கள் ஏற்படுத்தி இருக்கிறீர்கள்? யார் மீதாகிலும் காழ்ப்புணர்ச்சி கொண்டிருக்க நீங்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறீர்களா? உங்களை காயப்படுத்திய யாரையாகிலும் மன்னிக்கவே மாட்டேன் என்று தீர்மானித்து இருக்கிறீர்களா? உங்கள் விதியை நீங்களே கட்டுப்படுத்துகிறீர்கள் என்று நீங்கள் மனவுறுதி பெற்று இருக்கிறீர்களா? காம எண்ணங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுத்து இருக்கிறீர்களா? உங்கள் இருதயம் எப்போதாவது பெருமையினால் நிரம்பும்படி அனுமதித்து இருக்கிறீர்களா? இந்த பட்டியல் தொடர்ந்துகொண்டே இருக்கும். இந்த மனப்பாங்குகள் உங்கள் நண்பர்களுக்கும், அன்பானவர்களுக்கும் புலப்படாமல் இருக்கின்றன. சில நேரங்களில், உங்களை குறித்த விழிப்புணர்வு உங்களிடமே இருப்பது இல்லை, ஆனால் இவை அனைத்தும் முற்றுலும் உண்மையானவை.

தேவன் நம்முடைய இருதயத்தையும், நாம் செய்து இருக்கும் ரகசிய ஒப்பந்தங்களை ஆராய்ந்து பார்க்க அனுமதிப்பதே நமக்கு அளிக்கப்பட்ட சவால். சுய விருப்பத்தோடு அல்லது சுய நினைவு இல்லாமல் நம்முடைய மனப்பாங்கினாலும் சிந்தனைகளினாலும் செய்த பாவங்களை அவர் சுட்டிக்காட்ட நாம் அனுமதிக்க வேண்டும். கிறிஸ்துவின் இந்த சோதனை மனதிலும் இருதயத்திலும் நடைபெற்றது. இங்கு தான் அது தொடங்கியது. இந்த காரியத்தில் அவருடைய மனம் மற்றும் சித்தத்தின் அர்ப்பணிப்பு அண்டசராசரத்தின் விதியை தீர்மானிக்கிறதாக இருக்கும். அவருடைய

சிந்தனைகளை ஒப்புக்கொடுத்தாலும் அது இந்த பரீட்சையில் தோல்வி அடைவதை அறிவுறுத்தும்.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

• பிசாசின் விடா முயற்சியை குறித்து இங்கே நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

அவன் எளிதில் விட்டுக்கொடுத்துவிடுகிறவனா?

• இயேசுவின் சோதனை இங்கே தரிசனத்தில் நடைபெறுகிறது என்பது நமக்கு எவ்வாறு தெரியும்? நீங்கள் எப்போதாவது கனவிலே சோதிக்கப்பட்டு இருக்கிறீர்களா?

• உடல்ரீதியான பாவங்களுக்கும், மனது மற்றும் உள்ளத்தினால் செய்யும் பாவங்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன? உடல்ரீதியான பாவம் செய்தால் தான் நீங்கள் குற்றமுள்ளவர்களாக இருப்பீர்களா?

• நம்முடைய சிந்தனைகளினாலும், மனப்பாங்கினாலும் செய்கின்ற பாவங்களை அறிக்கையிடுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

• வேறு யாருக்கும் தெரியாமல் மனதிலும் இருதயத்திலும் எவ்வகையான பாவமுள்ள அர்ப்பணிப்புகள் ஏற்படுத்தப்படலாம்?

## ஜெபிப்பதற்காக:

• பிசாசின் தொடர்ச்சியான தாக்குதல்களில் இருந்து உங்களை காத்துக்கொள்ளும்படி கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள். பிசாசை தொடர்ந்து எதிர்ப்பதற்கு தேவையான பெலனை தரும்படி ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

• உங்கள் மனதையும் இருதயத்தையும் பாவத்தில்

இருந்து பாதுகாக்கும்படி கர்த்தரிடம் மன்றாட ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைகளையும், மனப்பாங்குகளையும் ஆராய்ந்து பார்த்து, நீங்கள் கையாண்டு அறிக்கையிட வேண்டிய பாவம் ஏதாகிலும் இருக்கிறதா என்று காட்டும்படி அவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

- உங்கள் சிந்தனைகளிலும், இருதயத்திலும் நீங்கள் ஏற்படுத்தியுள்ள பாவமுள்ள அர்ப்பணிப்புகளை காண்பிக்கும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். உங்கள் இருதயத்தினால் அவரை கனப்படுத்தும்படி அந்த அர்ப்பணிப்புகளை உடைக்க அவரிடம் உதவிசெய்யுமாறு வேண்டிக்கொள்ளுங்கள்.

# 5

# நீங்கள் யாரை ஆராதிப்பீர்கள்?

*இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்துகொண்டால், எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (லூக்கா 4:6-8)*

*வசனம் 5ல் உலகத்தின் ராஜ்யங்கள் அனைத்தையும் பிசாசு எவ்வாறு இயேசுவுக்கு காண்பித்தான் என்பதை பார்த்தோம். வசனங்கள் 6-8வரை நாம் தொடர்ந்து வாசிக்கும்போது, இதன் பின்னணியில் உள்ள காரணத்தை பார்க்க முடிகின்றது. கிறிஸ்து அவனை வணங்கி பணிந்துகொண்டால் அவற்றின் அதிகாரங்கள் அனைத்தையும், மகிமையையும் கிறிஸ்துவிடம் கொடுத்துவிடுவதாக வசனம் 6ல் அவன் வாக்குறுதி அளிக்கிறான். வசனங்கள் 6-8வரை உள்ள பகுதியை பிரித்து பார்த்து, உண்மையில் அங்கு என்ன சம்பவிக்கிறது என்பதை புரிந்துகொள்ள ஒரு நிமிடம் எடுத்துக்கொள்வோம்.*

*வசனம் 6, நாடுகளின் அதிகாரங்கள், மகிமைகள் அனைத்தையும் கிறிஸ்துவிடம் கொடுப்பதாக பிசாசு வாக்குறுதி*

அளிப்பதை கவனியுங்கள். அவன் தேவனுடைய குமாரனிடத்தில் பேசிக்கொண்டு இருக்கிறான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இவை அனைத்தும் அவனுக்கு கொடுக்கப்பட்டு இருப்பதால், அவன் விரும்புகிறவருக்கு இவற்றை கொடுக்கும் அதிகாரம் அவனித்தில் இருப்பதாக கிறிஸ்துவுக்கு அவன் நினைவுபடுத்துகிறான்.

இதை சற்று கவனமாக கண்ணோக்க வேண்டும்.

பாவம் உலகிற்குள் ஏதேன் தோட்டத்தின் வழியாக நுழைந்தபோது, மனித இனம் பிசாசிடம் கட்டுப்பாட்டை கொடுத்தது. தேவனுக்கு புறமுதுகு காட்டி, அவர்கள் பிசாசையும் அவனுடைய வழிகளையும் பின்பற்ற தீர்மானித்தார்கள். பாவம் பூமிக்குள் நுழைந்தபோது, சாத்தான் அவனுடைய வேலையை செய்வதற்காக அவிழ்த்துவிடப் பட்டான். தங்களுடைய சிருஷ்டிகரின் சத்தியத்திற்கு நாடுகள் முழுவதும் கண்பார்வை இழந்தவர்களாக மாறிவிட்டார்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களும் இந்த தாக்கத்தின் கீழ் வந்தார்கள். அவர்கள் இயல்பாக தேவனுக்கு எதிர்த்து நின்றார்கள். மனிதர்களின் ஆத்தும போராட்டத்தில், உலகம் சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது. தங்கள் சிருஷ்டிகரிடம் இருந்து திரும்பியபோது, மனித குலம் அவனிடம் கட்டுப்பாட்டை கொடுத்தது.

யோவான் 12ல், கர்த்தர் இயேசு தன் மரணத்தை குறித்து சிந்தித்துக் கொண்டு இருந்தார். தன்னுடைய உயிரை கொடுக்க வேண்டும் என்கிற உண்மையை எண்ணி, அவர் போராடிக்கொண்டு இருந்தபோது, நடக்க இருக்கும் காரியத்தில் பிதாவானவர் அவருடைய பெயரை மகிமைப்படுத்த வேண்டும் என்று மன்றாடினார். நடக்க இருக்கும் சம்பவத்தை நினைவுகூர்ந்து, கர்த்தர் இயேசு இவ்வாறு கூறினார்:

> இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். (யோவான் 12:31)

அவருடைய மரணம் இரண்டு காரியங்களை நிறைவேற்றும். முதலாவதாக, சிருஷ்டிகரிடம் இருந்து விலகிய தீமைக்காக அது உலகத்தை நியாயம் தீர்க்கும். இரண்டாவதாக, அது "இந்த உலகத்தின் பிரபு"வை வெளியே விரட்டும். "உலகத்தின் அதிபதி" என்று இயேசு பிசாசை குறித்து கூறுகின்றார். உலகத்தின் மீது சாத்தானுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை இது காட்டுகின்றது. பாவம் உலகிற்குள் நுழைந்தபோது, அவனுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் மரணம் அதை மாற்ற இருந்தது. அவருடைய மரணத்தின் மூலமாக, கர்த்தர் இயேசு மனிதர்களின் ஆத்துமாக்களை திரும்பப் பெற்றுக்கொள்வார். ஒருமனதாக அவர் அரசராக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு புதிய ராஜ்யத்தை அவர் ஏற்படுத்துவார்.

அவருடைய மரணத்திற்கு பிறகு, அவர்களிடம் பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்று இயேசு தன் சீடர்களிடம் கூறினார். தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை பரிசுத்த ஆவி அவர்களுக்கு வழிநடத்துவார். பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து அவர் இந்த உலகத்தை குற்றப்படுத்துவார்.

> அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப் பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16:8-11)

சாத்தானின் ஆட்சியின் கீழ் இந்த கொள்கைகள் அலட்சியம் செய்யப்பட்டன. உலகத்தின் அதிபதி நியாயம்தீர்க்கப்பட்டான் என்பதை கவனியுங்கள். (வசனம் 11) கிறிஸ்துவின் மரணம் சாத்தானை நியாயம்தீர்த்து, அவனுடைய பொல்லாத

செயல்களுக்கு அவனை கணக்கு கொடுக்கிறவனாக மாற்றியது. "இந்த உலகத்தின் அதிபதி" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டு இருப்பதை மீண்டுமாக கவனியுங்கள். மனிதர்களின் மனதையும், உள்ளங்களையும் ஆட்சி செய்த பொல்லாத அதிபதி சாத்தான்.

அப்போஸ்தலராகிய பவுல் 'இப்பிரபஞ்சத்தின் தேவனை' குறித்து 2 கொரிந்தியர் 4:4ல் பேசுகிறார் :

> தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு,
>
> இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

இப்பிரபஞ்சத்தின் தேவன் யார்? அவன் சாத்தானை தவிர வேறு யாரும் இல்லை. கிறிஸ்துவின் ஒளியை பார்க்க முடியாதபடி அவிசுவாசிகளின் கண்களை அவன் குருடாக்குகிறான். சத்தியத்தையும், அதை சார்ந்தவற்றையும் அவன் வெறுக்கிறான். அவிசுவாசிகளின் மனதையும், உள்ளங்களையும் அவன் கட்டுப்படுத்துவதால் அவன், "இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று அழைக்கப்படுகிறான்.

இவை அனைத்தும் நமக்கு கூறுவது என்ன? சாத்தான் உண்மையின் ஒரு சில பகுதிகளை மட்டுமே கூறுகிறான் என்று இவை நமக்கு வலியுறுத்துகின்றன. இவ்வுலகில் அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. ஏவாளை ஏமாற்றி இந்த அதிகாரத்தை அவன் பெற்றுக்கொண்டான் என்றாலும் உலகம் முழுவதும் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் இருதயத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். அவனுடைய ஆளுகையின் கீழ் அவர்கள் இருக்கிறார்கள். தன்னுடைய சொந்த நோக்கங்களுக்காக அவன் அவர்களை கட்டுப்படுத்தி, கையாண்டு வந்தான். இதற்காகத் தான் கர்த்தர் இயேசு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உலகம்

பாவத்தினாலும், பிசாசின் கட்டுப்பாட்டினாலும் தொலைந்து போனது. இது மீட்கப்பட்டு, பிதாவிடத்தில் திரும்பவும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மனித குலத்தின் மனங்களையும், உள்ளங்களையும் கட்டுப்படுத்துவது ஒரு வியக்கத்தக்க ஆற்றல் ஆகும். தன்னுடைய சொந்த விருப்பங்களுக்காக எல்லா நாடுகளிலும் தன் செல்வாக்கை சாத்தான் பயன்படுத்த முடியும். கர்த்தர் இயேசுவுக்கு முன்பாக அவன் நின்றுகொண்டு இருந்தபோது, உலகத்தின் அதிபதியாக அவனை பணிந்து கொண்டு, வழிபட்டாலே இவை அனைத்தையும் இயேசுவிடம் கொடுத்துவிட அவன் தயாராக இருந்தான்.

இந்த சோதனையில் அதிக வஞ்சனையான ஏதோ ஒரு காரியம் இருக்கின்றது. சாத்தானை வீழ்த்தி, அவனுடைய வல்லமையை அகற்றுவதற்கு, கர்த்தர் இயேசு மரிக்க வேண்டியதாக இருந்தது. பாவத்திற்கு பிதாவானவர் கொடுக்கும் தண்டனை இது தான் (ரோமர் 6:23 பார்க்க).

இயேசுவின் மரணம் அதற்கான அபராதத்தை செலுத்தும். சாத்தான் கர்த்தர் இயேசுவுக்கு ஒரு மாற்று வழியை கொடுக்கிறான். கர்த்தர் இயேசு அவனை ஆராதித்தால், உலகத்தின் மீது தனக்குள்ள கட்டுப்பாட்டை அவரிடம் ஒப்படைப்பதாக அவன் கூறுகின்றான். ஆண்டவருக்கு தேவையானவற்றை குறித்த கவலை எதுவும் சாத்தானுக்கு இல்லை. அவனிடம் வேறு வழி இருக்கிறது. கிறிஸ்துவின் உடல்ரீதியான மரணமும், அதினால் ஏற்படும் வேதனையும் இந்த வழியில் தேவைப்படாது. சாத்தான் தன் கட்டுப்பாட்டை ஒப்படைக்கும்போது, தேவனுக்கு நாம் செலுத்த வேண்டிய கடன் செலுத்தப்படாமல் போகும். இவ்வுலகம் பிதாவிடத்தில் இருந்து பிரிக்கப்படும்.

குறுக்கு வழிகளை கொடுக்க சாத்தான் விருப்பமாக இருக்கிறான். கர்த்தர் இயேசுவுக்கு இந்த குறுக்கு வழியை

கொடுப்பதன் மூலம், அவர் மூலமாக பிதாவுக்கு இருந்த நோக்கத்தை வீழ்த்திவிடலாம் என்பது அவனுக்கு தெரியும்.

இயேசு அவனை வணங்க வேண்டும் என்று சாத்தான் கேட்டுக்கொண்டான். அந்நேரத்தில் சாத்தானிடம் இருந்த வல்லமையை யோசித்து பாருங்கள். நாடுகள் அனைத்தும் இருளில் கிடந்தன. அரசர்களும், அதிகாரிகளும் அவன் விரும்புவதை எல்லாம் செய்யும்படி உந்தினான். பழைய ஏற்பாட்டில் உள்ள யோபு புத்தகத்தில் நாம் இவ்வாறு பார்க்கிறோம், சாத்தான் யோபுவின் குடும்பம் முழுவதையும் கொன்று, யோபுவுக்கு வேதனையூட்டும் பருக்களை கொடுத்தான். அவன் "உலகத்தின் அதிபதி". இந்த அதிகாரத்தையும், வல்லமையையும் அங்கீகரிக்கும்படி அவன் கர்த்தரிடம் கூறுகின்றான். அவனுக்கும், இந்த உலகத்தில் அவனுக்கு இருந்த அதிகாரத்திற்கும் அடி பணியுமாறு அவன் கிறிஸ்துவை கேட்டுக்கொள்கிறான். கிறிஸ்து இதைச் செய்தால், அவன் இந்த அதிகாரங்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைப்பதாக சாத்தான் வாக்குறுதி அளிக்கிறான். இதில் சாத்தானுக்கு இருக்கும் அதிகமான பெருமையையும், அகங்காரத்தையும், நம்மால் பார்க்க முடிகின்றது.

வேதத்தில் இருந்து ஒரு பகுதியை சாத்தானுக்கு பதில் கொடுப்பதற்காக இயேசு பயன்படுத்துகிறார். **"தேவனாகிய கர்த்தரை மட்டுமே பணிந்துகொள்ள வேண்டும்"** என்று அவர் அவனிடம் கூறினார் (உபாகமம் 6:13 பார்க்க) அனைத்து உலகின் அதிகாரம் மற்றும் வல்லமை, மற்றும் வேதத்திற்கு கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கு இடையே தீர்மானிக்கும்படி கூறியபோது, கிறிஸ்து வேதத்தை தெரிந்துகொண்டார். மெய்யாகவே சாத்தானை வீழ்த்த வேண்டும் என்றால், அதை தேவனுடைய வழியிலே செய்ய வேண்டும் என்பதை இயேசு அறிவார்.

தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் பவுல் எழுதும்போது இந்த ஆலோசனையை கொடுக்கிறார்:

மேலும் ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். *(2 தீமோத்தேயு 2:5)*

ஓட்டப்பந்தயத்தில் ஓடும் ஒரு வீரர், தன்னுடைய ஓட்டப்பாதையில் செல்லாமல் குறுக்குப்பாதையில் சென்றால் என்ன நடக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அதன் விளைவு என்னவாக இருக்கும்? ஏமாற்றியதற்காக அவர் பந்தயத்தில் இருந்து தகுதியிழப்பு அடைவார். வஞ்சனையின் மூலம் கிறிஸ்து இந்த போராட்டத்தில் வெற்றி பெற முடியாது. இதிலே குறுக்குவழிகள் எதுவும் இருக்க முடியாது. அவருக்கு முன்பாக இருக்கும் பந்தயம் தெளிவாக அடையாளம் குறிக்கப்பட்டு இருக்கின்றது. பிதா அவரிடம் என்ன செய்ய வேண்டும் என்று கூறினார் என்பது அவருக்கு தெரியும். அதை காட்டிலும் குறைவான எதையும் செய்வதற்கு அவர் இணங்க மாட்டார்.

இன்றைக்கு நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கைக்கு ஆண்டவர் வைத்திருக்கும் பரிபூரண சித்தத்தை காட்டிலும் குறைவான ஒன்றுக்கு நீங்கள் இணங்கிவிடுவீர்களா? உங்கள் வலியை இலகுவாக்குவதற்காக இணங்கிச் சென்றுவிடுவீர்களா? உங்கள் இலக்கை அடைவதற்கு தேவனுடைய வார்த்தை கூறும் காரியத்தை நீங்கள் அலட்சியம் செய்துவிடுவீர்களா? சட்டங்களை கடைபிடிக்காமல், வெற்றி மகுடம் கிடைக்காது.

அவருக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள வலியையும், வேதனையையும், இயேசு எதிர்கொள்வார். சாத்தான் அளிக்கும் சலுகைக்கு அவர் புறமுதுகு காட்டுவார். அவருடைய வாழ்க்கைக்கு ஆண்டவர் அமைத்த திட்டத்தில் இருந்து கவனச்சிதைவு அடைய மாட்டார். முழுமையான கீழ்ப்படிதலே வெற்றிக்கான திறவுகோல். அதை காட்டிலும் குறைவான அனைத்தும் தோல்வியையே கொடுக்கும்.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

• இந்த உலகத்தின் அதிகாரம் எவ்வாறு சாத்தானிடம் கொடுக்கப்பட்டது?

• இவ்வுலகில் சாத்தானுக்கு என்ன வல்லமை இருக்கிறது? உங்களை சுற்றி அவனுடைய செயலுக்கான சாட்சியங்கள் ஏதேனும் இன்று இருக்கின்றதா?

• கிறிஸ்துவின் மரணம் எதை நிறைவேற்றியது? இவ்வுலகில் சாத்தானின் வல்லமையையும், அதிகாரத்தையும் அது எவ்வாறு உடைத்தது?

• தன்னிடம் பணிந்துகொண்டு, வழிபட்டால் இவ்வுலகின் கட்டுப்பாட்டை கர்த்தர் இயேசுவிடம், கொடுப்பதாக சாத்தான் கூறினான். இந்த தீர்வு நம்மை எவ்வாறு நம்மை தொடர்ந்து பாவத்திலேயே வைத்திருக்கும்?

• வேதத்தின் சத்தியத்திற்கு அர்ப்பணிப்பதிலும், வேதத்திற்கு முழுமையாக கீழ்ப்படிந்து ஊழியம் செய்வதிலும் கிறிஸ்துவை குறித்து இங்கே நாம் என்ன பார்க்கிறோம்?

• இணங்கிச் சென்று, பிசாசு அளிக்கும் குறுக்குவழிகளை எடுத்துக்கொள்ளும்படி எப்போதாவது நீங்கள் சோதிக்கப்பட்டு இருக்கிறீர்களா? விவரிக்கவும்.

• உங்கள் காலத்தில் உள்ள விசுவாசிகளின் வாழ்க்கையில் இணங்கிச்செல்லுதல்களை பார்த்து இருக்கிறீர்களா ?

## ஜெபிப்பதற்காக:

• பிசாசினால் கொடுக்கப்பட்ட குறுக்குவழியை எதிர்த்து நின்றதற்காக கர்த்தர் இயேசுவுக்கு நன்றி செலுத்துங்கள்

. உங்கள் பாவத்திற்கான விலையை அவராகவே சித்தம்கொண்டு செலுத்தியதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

- உங்கள் வாழ்க்கையில் பிசாசின் சோதனைகளை எதிர்த்து நிற்க கிருபை அளிக்குமாறு கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

- உங்கள் வாழ்க்கையில் இணங்கிச் செல்லும் பகுதிகள் ஏதேனும் இருக்கின்றனவா என்று பார்க்க உதவி செய்யுமாறு கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். தேவனுடைய வழிநடத்துதலுக்கும், அவருடைய வார்த்தையின் சத்தியத்திற்கும் அதிகமான அர்ப்பணிப்பை கொடுக்கும்படி மன்றாடுங்கள்.

- கிறிஸ்துவின் சபைக்காக, குறிப்பாக துன்புறுத்தப்பட்டு, போராடிக்கொண்டு இருப்பவர்களுக்காக மன்றாடுங்கள். விட்டுக்கொடுக்காத விசுவாசமும், அவருடைய வார்த்தைக்கு அர்ப்பணிப்பும் கொடுக்குமாறு ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

# 6

# எருசலேமுக்கு கொண்டு செல்லுதல்

*அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி:*

> *"நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும்". ஏனெனில், "உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும் எழுதியிருக்கிறது' என்று சொன்னான்." (லூக்கா 4:9-11)*

வனாந்தரத்திலே இயேசு சந்தித்த மூன்றாவது சோதனையை லூக்கா 4:9-11 வசனங்கள் பதிவுசெய்து உள்ளது. இங்கே பிசாசு இயேசுவை எருசலேமுக்கு கொண்டு சென்று, அங்கே தேவாலயத்தின் உயரமான இடத்திலே நிற்க வைத்தான். பின்னர் தேவதூதர்கள் அவரை பார்த்துக்கொள்வார்கள் என்று வாக்குறுதி அளிக்கும் ஒரு வேதபகுதியை மேற்கோள் காட்டி, அவரை அங்கிருந்து குதிக்கும்படி சொன்னான். இந்த வசனங்களில் என்ன சம்பவிக்கின்றன என்பதை பரிசோதித்து பார்ப்பதற்காக ஒரு நிமிடம் எடுத்துக்கொள்வோம்.

பிசாசு இயேசுவை எருசலேமுக்கு கொண்டு சென்றான் என்பதை கவனியுங்கள். யூதர்களின் மனதில், எருசலேம் என்பது மகா பரிசுத்த நகரமாக கருதப்பட்டது. இங்கு தான் தேவனுடைய ஆலயம் இருக்கின்றது. இவ்விடத்தில்

தேவனாகிய கர்த்தரை வழிபடுவதற்காக வெகு தொலைவில் இருந்து மக்கள் வருவார்கள். இந்த சோதனை ஒரு பரிசுத்தமான இடத்தில் நடைபெற்றது. பிசாசு தேவாலயத்திற்கு வந்தான் என்பது உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றதா? இந்த இடத்திற்கு வர அவன் விரும்ப மாட்டான் என்பது போல தோன்றலாம். உண்மையில், அவன் மிகவும் விரும்பி வரக்கூடிய முதல் இடமாகவே இது இருக்கலாம்.

பிரிவினைகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்தவும், அவர்கள் பாவம் செய்யும்படியும் கர்த்தரிடம் இருந்து திரும்பவும் தேவனுடைய மக்களுக்கு நடுவே சத்துரு நின்று கொண்டு இருப்பதை பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் வாசிக்கும்போது நாம் பார்க்க முடியும். அவனுடைய பிரசன்னம் பல நேரங்களில் புனித இடங்களில் உணரப்படுகின்றது. பல தருணங்களில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஸ்தலத்தின் அருவருப்புகளை குறித்து தேவனுடைய மக்களிடம் பேசி இருக்கிறார்கள். தேவனாகிய கர்த்தர் தன்னுடைய பணிவிடைக்காரர் எரேமியா மூலமாக இஸ்ரவேலுக்கு கூறியதை கவனியுங்கள்:

> எனக்குக் கோபமுண்டாகும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் செய்த எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் இப்படி நடக்கும்.
>
> முகத்தையல்ல, முதுகை எனக்குக் காட்டினார்கள்; நான் ஏற்கனவே அவர்களுக்கு உபதேசித்தும் அவர்கள் புத்தியை ஏற்றுக்கொள்ளச் செவிகொடாமற்போனார்கள். அவர்கள் என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தைத் தீட்டுப்படுத்தும்படிக்கு, தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள். (எரேமியா 32:32-34)

அவருடைய நாமம் தரிப்பிக்கப்பட்ட வீட்டிலே

அருவருப்பான சிலைகளை தேவனுடைய மக்கள் அமைத்தார்கள் என்பதை குறிப்பாக கவனித்து பாருங்கள். பரிசுத்த ஸ்தலம் தீட்டுப்படுத்தப்பட்டது.

எசேக்கியேல் தீர்க்கதரிசியிடம் தேவாலயத்தில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதை எசேக்கியேல் 8 ஆம் அதிகாரத்தில் கர்த்தர் வெளிப்படுத்தினார். இந்த காரியங்கள் மனித கண்களுக்கு தெரியவில்லை என்றாலும், அவை தேவனுடைய கண்களுக்கு மறைவாக இல்லை. தரிசனத்திலே, தேவாலய சுவரிலே ஒரு குழியை தோண்டும்படி எசேக்கியேலிடம் கர்த்தர் உரைத்தார். அப்படி அவர் செய்த போது ஒரு கதவை பார்த்தார். அந்த கதவின் வழியாக சென்று அங்கே உண்மையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதை பார்க்கும்படி கர்த்தர் அவரிடம் கூறினார்.

அவர் என்னைப்பார்த்து: நீ உள்ளே போய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார். நான் உள்ளே போய்ப் பார்த்த போது, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன. இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன்தன் கையிலே தன்தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள், தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக்

*கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார். (எசேக்கியேல் 8:9-12)*

தேவாலயம் பொல்லாததும் அருவருப்பானதுமான பொருட்களினால் நிறைந்து இருந்தது. அந்நாட்டின் மூப்பர்கள் அசுத்தமான அருவருப்பான சிலைகளை வழிபட்டுக்கொண்டு இருந்தார்கள். இந்த வேதபகுதியை நீங்கள் வாசிக்கும்போது, நடைபெறும் சம்பவத்தில் சாத்தானுடைய பிரசன்னம் இருப்பதை உங்களால் உணராமல் இருக்க முடியாது.

பல நேரங்களில் தேவனுடைய கோபம் அவருடைய மக்கள் மீதும், அவர்களுடைய பொல்லாத வழிகள் மீது பற்றி எரிகின்றது. எசேக்கியேல் 9 ஆம் அதிகாரத்தில், எருசலேம் நகரம் முழுவதுமாக சென்று, அந்த நகரத்திலே நடைபெற்ற அருவருப்பான காரியங்களுக்காக மனம்வருந்தியவர்களின் நெற்றியில் அடையாளம் போடும்படி ஒரு தேவதூதனிடம் கூறினார் (எசேக்கியேல் 9:34 பார்க்க). அதன் பின்னர் முதல் தேவதூதனை தொடர்ந்து மற்ற தேவதூதர்கள் சென்று நெற்றியில் அடையாளம் இல்லாதவர்களை கொல்லும்படி கூறினார்.

*முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும் சங்கரித்துக் கொன்றுபோடுங்கள்; அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள் என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள் என்று என் காதுகள் கேட்கச் சொன்னார்; அப்பொழுது அவர்கள் ஆலயத்துக்கு முன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கம் பண்ணினார்கள். (எசேக்கியேல் 9:6)*

எசேக்கியேல் 9:6 வசனத்தில் இந்த தூதர்கள் தங்கள் பணியை எங்கே துவங்கினார்கள் என்பதை கவனியுங்கள். ஆலயத்துக்கு முன்னே இருந்த மூப்பர்களிடம் அவர்கள் துவங்கினார்கள். தேவாலயத்திலே நாட்டில் பொல்லாப்புக்காக

மனம்வருந்தாதவர்கள் இருந்தார்கள். உலகத்தின் அருவருப்புகளில் சிக்கிக்கொண்ட ஆண்களும், பெண்களும் அந்த தேவாலயத்திலே இருந்தார்கள்.

தேவாலய மூப்பர்களின் வாழ்விலே சாத்தான் உயிரோட்டத்துடனும், ஈடுபாட்டுடனும் செயல்பட்டான்.

ஜெப வீடாக இருக்க வேண்டிய தேவாலயம், சந்தையாக மாற்றப்பட்டு இருப்பதைக் கண்ட கர்த்தர் இயேசு எரிச்சல் அடைவதை புதிய ஏற்பாட்டிலே நாம் பார்க்க முடிகின்றது.

> இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொல்லுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியிலே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து: என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார். (மத்தேயு 21:12--13).

கோபத்திலே, மேசைகளை கவிழ்த்து, ஒரு சாட்டையை உருவாக்கி, அங்கிருந்த ஆட்களை துரத்திவிட்டார் இயேசு . பரிசுத்த ஸ்தலம் ஒரு போர்க்களம். தேவனாகிய கர்த்தரிடம் இருந்து மக்களை வழிவிலகிச் செல்லும்படி அவ்விடத்தில் தன்னால் இயன்ற அனைத்தையும் சாத்தான் செய்கிறான். நம்முடைய துதி ஆராதனைகளிலும், ஜெபக்கூடுகைகளிலும், செயற்குழு கூட்டங்களிலும் சாத்தான் இதை செய்வது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. திருச்சபைக்கு செல்வது சாத்தானுக்கு பிடித்தமான காரியம் !

தேவாலயத்தின் உயரமான இடத்திற்கு சாத்தான் இயேசுவை கொண்டு சென்றான் என்பதை கவனியுங்கள். அவரை அவன் உச்சிக்கு கொண்டு வந்தான். உயரமான மற்ற இடங்களுக்கு சாத்தான் இயேசுவை கொண்டு சென்று இருக்கலாம், ஆனால் அவன் தேவாலயத்தின் உயரமான இடத்தை தெரிந்துகொண்டான். இதற்கு ஒரு காரணம்

இருக்கக்கூடும். உங்கள் திருச்சபையில் உயர்ந்த பதவியை சாத்தான் உங்களுக்கு கொடுத்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்களா?

அவன் உங்களை பிரபலமாக்கினால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்களா? கிறிஸ்தவ வட்டாரங்களில் நீங்கள் அதிகம் அதிகமாக முக்கியத்துவம் பெற்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்களா?

திருச்சபையிலே உயர்வான, அதிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகளை நமக்கு கொடுப்பதில் சாத்தானுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை. இந்த இடத்திலே நம்மை வைப்பதன் மூலம், நாம் செய்யக்கூடிய எந்த ஒரு பாவமும், தோல்வியும் வெளியரங்கமாகி, அதிக அழிவை ஏற்படுத்தி, திருச்சபையின் மீது முழுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். நமக்கு உயர்வான பதவியை கொடுப்பதன் மூலம், நம் மூலமாக அதிகமான மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த அவனுக்கு வாய்ப்புகள் கிடைக்கும்.

நம்முடைய திருச்சபை வட்டாரங்களில் அதிக செல்வாக்கு உடைய உயர்வான நிலைகளை பெற வேண்டும் என்று ஏங்குவது மிகவும் சுலபமான காரியம் ஆகும். மகத்தான பொறுப்புடன், மகத்தான பிரச்சனையும் வரும். மகத்தான பொறுப்புடன் மகத்தான சோதனையும் வரும். யாக்கோபு 3:1ல் அப்போஸ்தலர் யாக்கோபு தன்னுடைய வாசகர்களுக்கு என்ன கூறுகிறார் என்பதை கவனியுங்கள்:

> என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. (யாக்கோபு 3:1)

அதிகாரம் உடைய பதவியில் இருக்கும் மக்கள் விழுந்துபோக வேண்டும் என்று சாத்தான் தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்வான் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். நம்முடைய பதவியை கண்டு அவன் பயந்துபோவது

இல்லை. உண்மையில், அந்த உயர்ந்த பதவிகள் தான் அவன் விரும்பி தேர்ந்தெடுக்கும் இலக்குகள்..

இறுதியாக, வேதவாக்கியங்களை தன்னுடைய சொந்த தீர்மானங்களுக்காக பயன்படுத்த சாத்தான் மிகவும் விருப்பமாக இருக்கிறான் என்பதை கவனியுங்கள். வேதவாக்கியங்கள் என்ன கூறுகின்றன என்பது சாத்தானுக்கு தெரியும். சொல்லப்போனால், இயேசுவை சோதிக்க முயற்சி செய்த போது அவன் சங்கீதம் 91:11-12 வரை உள்ள வேதபகுதியை மேற்கோள் காட்டினான்.

இந்த வேதபகுதி என்ன கூறுகின்றது என்பதை கவனியுங்கள் :

> எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள். *(சங்கீதம் 91:9-12)*

தன்னுடைய குறிக்கோளுக்கு பொருத்தமாக இருந்த வாக்கியத்தை மட்டும் இந்த வேதபகுதியில் இருந்து பிசாசு பயன்படுத்தினான் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. தேவனுடைய பணிவிடைக்காரரை தீங்கில் இருந்து விலக்கி பாதுகாக்க தன்னுடைய தூதர்களுக்கு கட்டளையிடும் பகுதியை மட்டும் அவன் மேற்கோள் காட்டினான், ஆனால் அந்த வசனங்களின் பின்னணியை இணைக்க தவறினான். சாத்தான் மேற்கோள் காட்டிய வேதபகுதி சங்கீதம் 91 அந்த வாக்குதத்தத்தின் பின்னணியை கொடுத்து துவங்குகின்றது. உன்னதமானவரை நம்முடைய அடைக்கலமாகக் கொண்டால்,

நமக்கு எந்த தீங்கும் நேரிடாது என்று அது கூறுகின்றது. வேண்டும் என்றே தேவாலயத்தில் இருந்து கீழே குதிப்பதன் மூலம், இயேசு "உன்னதமானவரை தன்னுடைய தாபரமாக" மாற்றிக்கொள்ள முடியாது. அடுத்த அத்தியாயத்தில் இதை குறித்து நாம் முழுமையாக ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தர் இயேசுவை சோதிப்பதற்காக சாத்தான் வேதவாக்கியத்தை பயன்படுத்துகிறான் என்பதே நாம் இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம் ஆகும்.

வேதவாக்கியத்தை சாத்தான் சரியாக பயன்படுத்தவில்லை என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது. சரியான பின்னணியில் தான் மேற்கோள் காட்டிய வசனத்தை சரியான பின்னணியில் கூற தவறியதன் மூலமாக, கிறிஸ்து பாவம் செய்யும்படி செய்வதற்காக சாத்தான் வேதவாக்கியத்தை முழுமையாக பயன்படுத்த முயற்சித்தான். வரலாறு முழுவதுமாக, சாத்தான் இந்த நுட்பத்திலே மிகவும் வெற்றியுள்ளவனாக இருந்திருக்கிறான்.

தங்கள் சொந்த விருப்பங்களுக்காக வேதவாக்கியங்களை தவறாக அர்த்தப்படுத்தி, திரித்து கூறும்படி சாத்தான் பலரை வழிநடத்தி இருக்கிறான். அவனுடைய தாக்கத்தின் கீழ், சிலர் வேதவாக்கியத்தை அதன் பின்னணியின்றி பயன்படுத்தி, பலரை வழிதவறிச் செல்லும்படி செய்து இருக்கிறார்கள். வேதவாக்கியங்களை தவறாக அர்த்தம்புரிந்துகொண்டதன் விளைவாக பல தீய உபதேசக்கூட்டத்தாரும், பிரிவினரும் உருவாகி இருக்கிறார்கள். உள்ளத்திலே அன்பு இல்லாமல் வேதவாக்கியங்களை பிரசங்கம் செய்கின்ற பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய சட்டரீதியான, இருதயமற்ற முறையிலான வேதவாக்கிய செயல்முறைகள், பலரை ஆண்டவரிடம் இருந்து வழிதப்பி செல்லும்படி செய்து இருக்கின்றன. தேவனுடைய மக்களை வழிவிலகி செல்லும்படி செய்வதற்கு வேதவாக்கியங்களை பயன்படுத்த சாத்தான் தயங்க மாட்டான்.

இவை அனைத்திலும் இருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம். சாத்தான் அடிக்கடி திருச்சபைக்குள் வருவான். அவனுடைய நோக்கத்திற்கு பொருத்தமாக இருந்தால் வேதவாக்கியங்களையும் அவன் பயன்படுத்துவான். உங்களை ஒரு பதவியில் வைப்பதன் மூலம், உங்களுடைய வீழ்ச்சி பலருக்கும் சாட்சியாக இருக்கும் என்பதற்காக, உங்களை பதவியில் முன்னேற்றம் அடையவும் அவன் ஊக்கப்படுத்துவான்.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

- இயேசுவின் சோதனை எருசலேமிலும், தேவாலயத்திலும் நடைபெற்றது என்பது முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் என்ன?

- துதி ஆராதனைகளிலும், ஜெபக்கூடுகளைகளிலும், சபை செயற்குழு கூடுகைகளிலும் சாத்தானின் பிரசன்னத்தை கண்ணாரக் கண்டு இருக்கிறீர்களா?

- உயர்வான அதிகாரம் உடைய பதவி நாம் சோதனை அடைவதற்கு அதிக வாய்ப்புள்ளவர்களாக நம்மை மாற்றுவது எப்படி? அதிகாரமுடைய இடத்தில் இருக்கும் ஒருவருடைய வீழ்ச்சி சபையின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?

- வேதவாக்கியத்தை தவறாக அர்த்தப்படுத்துவது பாவத்தை நியாயப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்தப்படலாம்? ஒரு வேதப்பகுதியை அதன் பின்னணி இல்லாமல் பயன்படுத்துவதன் விளைவு என்ன?

## ஜெபிப்பதற்காக:

- சாத்தானின் தாக்கத்தில் இருந்து உங்கள் வழிபாட்டு ஸ்தலத்தை பாதுகாக்கும்படி கர்த்தரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். உங்கள் நடுவே சாத்தானின் சோதனைகளையும்

செயல்களையும் உணர்ந்துகொள்ளும் பகுத்தறிவை தரும்படி ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

- நீங்கள் ஆராதிக்கும் இடத்திலே அதிகாரமுள்ள பதவிகளில் இருப்பவர்களை பாதுகாக்கும்படி ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

- அவருடைய வார்த்தையை சரியாக புரிந்துகொள்ள கிருபை அளிக்குமாறு ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். உங்கள் ஐக்கிய குழுவில் அவருடைய வார்த்தையை பிரசங்கித்து, கற்றுக்கொடுப்பவர்களுக்காக மன்றாடுங்கள். அன்போடும், சத்தியத்தோடும் அவர்கள் அதை செயல்படுத்த வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள்.

# 7

# தேவனை பரீட்சை பார்த்தல்

> *அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே என்றார். (லூக்கா 4:12)*

தேவாலயத்தின் உயரமான இடத்திற்கு இயேசுவை கொண்டு சென்று, சங்கீதம் 91:11-12 வசனங்களை மேற்கோள் காட்டி, தேவனுடைய வார்த்தையை நிரூபிக்கும்படி பிசாசு கூறினான்.

> *ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும் எழுதியிருக்கிறது என்று சொன்னான் (லூக்கா 4:10-11).*

இந்த சோதனையின் இயல்பை உணர்ந்துகொள்ள ஒரு நிமிடம் எடுத்துக்கொள்வோம். இங்கே இரண்டு காரியங்களில் சாத்தான் இயேசுவுக்கு சவால்விட்டான். முதலாவது, பிதாவானவர் அவர் மீது வைத்திருந்த அன்பின் மீதும் அக்கறை மீதும் சவால்விட்டான். உலகை பிதாவிடம் திரும்ப ஒப்படைப்பதற்காக கர்த்தர் இயேசு வந்தார் என்பதை நினைவுகூறுங்கள். பாவத்திற்கு பலியாக தன்னுடைய உயிரை கொடுக்க வேண்டிய அவசியம் இதில் இருக்கின்றது. இதை செய்வது கர்த்தர் இயேசுவுக்கு மிகவும் கடினமான காரியமாக இருக்கும். சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக

கெத்செமனே தோட்டத்தில் இயேசு செய்த மன்றாட்டில் இருந்து இத்ஜில் ஒரு துளியை நாம் பார்க்க் முடியும்.

> பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. (லூக்கா 22:42-44)

அன்று நடக்க இருந்த சம்பவத்தினால் கர்த்தர் இயேசு மிகவும் துக்கப்பட்டார். உடல்ரீதியான வலியும், பிதாவிடத்தில் இருந்து பிரிக்கப்படுவதும் தாங்கிக்கொள்ள முடியாத வேதனை ஆகும்.

இயேசு சோதிக்கப்பட்ட அன்று, அவர் மீது பிதாவுக்கு இருந்த அக்கறைக்கு சத்துரு சவால்விட்டான். இயேசுவிடம் பிசாசு கூறியது இதைப்போல தான் இருந்திருக்கும்: “உண்மையாகவே பிதா உன் மீது அக்கறையாக இருப்பார் என்று நினைக்கிறாயா? இந்த தேவாலயத்தில் இருந்து குதித்தால், உனக்கு தீங்கு ஏற்படாமல் உண்மையாகவே அவர் உன்னை காப்பாற்றுவாரா?”

நாம் ஊழியம் செய்யும்போதும், நம்முடைய பரலோக தந்தையின் அக்கறையை குறித்த கேள்விகளை பிசாசு கேட்பான் என்பதில் சந்தேகமே இல்லை. நம்மை திசைதிருப்ப வேண்டும் என்பதே அவனுடைய இலக்கு. நமக்கு தேவை ஏற்படும் நேரங்களில் நம்முடைய பரலோக தந்தையின் கொடை மீது சந்தேகத்தை ஏற்படுத்தி, நாம் நம்பிக்கை இழக்கும்படி செய்து அல்லது அவர் மீது நம்பிக்கை இல்லாமல் நம்முடைய கரத்தில் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்படி செய்வான். போராட்டத்தின் கடினமான சூழ்நிலையில், எல்லாம் தவறாக

சென்றுகொண்டு இருப்பது போல தோன்றும் போது, சத்துரு இவ்வாறு உங்கள் காதுக்குள் சொல்வான் : "உன் ஆண்டவர் எங்கே? உண்மையாகவே அவருக்கு உன் மீது அக்கறை இருந்தால், நீ இதில் கடந்துசெல்ல அவர் அனுமதித்து இருக்க மாட்டார்."

பல நேரங்களில் என்னுடைய ஊழியத்தில், என் விசுவாசத்தின் மீது சாத்தான் கேள்வி எழுப்புவதை நான் கேட்டிருக்கிறேன். என்னுடைய பரம பிதாவின் கொடை மீது சவால்விடுத்து, தக்க நேரத்தில் உதவும் அவருடைய கொடை மீது நான் வருந்தும்படி செய்வான். இன்று நீங்கள் கர்த்தருக்கு உண்மையாக பணிவிடை செய்தால், உங்கள் வாழ்க்கையில் சந்தேகத்தையும், மனச்சோர்வையும் சத்துரு உருவாக்குவான் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்த வசனத்தில் இரண்டாவதாக ஒரு சவாலும் இருக்கலாம். நம்முடைய பரம பிதாவின் அக்கறை மற்றும் கொடை மீது மட்டும் பிசாசு சவால்விடுக்காமல், அவருடைய வார்த்தையில் இருக்கும் உண்மையின் மீதும் அவன் சவால்விடுக்கிறான். உண்மையில், அவன் இயேசுவிடம் கூறியதன் பொருள்: "உம் கால்கள் கல்லில் இடறாதபடி, பிதாவானவர் தம்முடைய தூதர்களை அனுப்பி, உம்மை உயர்த்தி காப்பார் என்று சங்கீதம் 91 கூறுகின்றது. அது உண்மை என்று நீர் நம்புகிறீரா? இந்த தேவாலயத்தில் இருந்து குதித்தால் உமக்கு என்ன சம்பவிக்கும்? உண்மையாகவே பிதாவானவர் அவர் வாக்குறுதி அளித்ததை செய்வாரா? உண்மையாகவே, நீர் விழும்போது, தேவதூதர்கள் விரைந்து வந்து, நீர் தரையை தட்டுவதற்குள் உம்மை காப்பாற்றுவார்கள் என்று நினைக்கிறீரா? சாத்தானின் சவாலை இங்கே உங்களால் உணர முடியும்.

நமக்கு முன்பாக இருக்கும் போர்களத்தில் இரண்டு காரியங்களை நாம் உறுதியாக நம்ப வேண்டும். முதலாவதாக, சத்துருவை எதிர்கொள்வதற்காக நாம் அடி எடுத்து

வைக்கும்போது, தேவனுடைய அன்பும், அக்கறையும் நமக்கு கிடைக்கும் என்பதை உறுதியாக நம்ப வேண்டும். இரண்டாவதாக, நமக்கு வழிகாட்டும் அவருடைய வார்த்தை உண்மையுள்ளது என்பதை நாம் உறுதியாக நம்ப வேண்டும். இவை இரண்டில் ஏதாகிலும் ஒன்றை நாம் சந்தேகித்தாலும் அது நம்முடைய பணியில் தோல்வியை கொடுக்கும். பிதாவின் அக்கறை மற்றும் அன்பு அல்லது அவருடைய வார்த்தையின் உண்மையை சந்தேகித்து இருந்தால் கர்த்தர் இயேசு அவருக்கு முன்பாக இருந்த பணியை எவ்வாறு நிறைவேற்றி இருப்பார். இதை குறித்து பல காரியங்கள் கூற வேண்டியது இருக்கிறது, ஆனால் தற்போது நமக்கு முன்பாக இருக்கும் வசனத்தின் மீது கவனம் செலுத்துவோம்.

நாம் நம்பும் ஒன்றை குறித்து சவால்விடப்படும்போது, அது சரி என்று நிரூபிக்க நினைப்பதே நம்முடைய இயல்பு. எனக்கு சவால்விடப்பட்டபோது ஆயுதங்களை எடுத்துக்கொண்ட காலங்கள் உண்டு என்பதை நான் ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். சில நேரங்களில் அவ்வாறு செய்து நான் சத்துருவின் கரங்களுக்குள் விழுந்திருக்கிறேன். என்னுடைய நம்பிக்கையை நான் நியாயப்படுத்த வேண்டும் அல்லது என் மீது குற்றம்சாட்டுகிறவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அவசியத்தை நான் உணர்ந்து இருக்கிறேன். இதன் விளைவாக நான் கோபம் அடைந்து இருக்கிறேன், அல்லது ஒரு கசப்பான அல்லது தேவனுக்கு புறம்பான மனப்பாங்கு என் வாழ்க்கைக்குள் ஊடுருவுவதை நான் கண்டு இருக்கிறேன். நான் நம்புவது உண்மை என்பதை நிரூபிக்கும் முயற்சியில், என்னுடைய வாழ்க்கையில் பிசாசுக்கு பாதபடியை கொடுத்து இருக்கிறேன். பாதபடியை கொடுத்தவுடன், கோபம், பகைமை மற்றும் பெருமையின் விதைகளை சத்துரு விரைவாக விதைத்துவிடுகிறான். அவனுடைய பொறியில் சிக்கிக் கொள்வதை நாம் உணர்கின்றோம்.

இங்கே பிசாசு இயேசுவுக்கு சவால்விடுக்கிறான். அவர்

நம்பும் காரியத்திற்காக அவருடைய உயிரை கொடுப்பாரா என்று கேட்கிறான். இது நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வியாக இருந்தாலும், இங்கே பிசாசு இதை செய்வதில் ஒரு நுட்பமும், தீமையும் இருக்கின்றது பிதாவானவர் கேட்டுக்கொள்ளாத ஒரு காரியத்தை கர்த்தர் இயேசு செய்யும்படி அவன் சோதிக்கிறான். வேண்டுமென்றே தன்னை ஆபத்திற்குள் விழவைத்துக்கொள்ளும்படி அவன் இயேசுவை பார்த்து கூறுகின்றான்.

இதற்கு பிரதியுத்தரமாக கர்த்தர் இயேசு உபாகமம் 6:16ல் இருந்து ஒரு வசனத்தை மேற்கோள் காட்டுகின்றார்.

> "நீங்கள் மாசாவிலே செய்ததுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பீர்களாக."

மாசாவை பற்றிய முதலாவது குறிப்பு இந்த வசனத்தின் பின்னணியை நமக்கு கொடுக்கின்றது. யாத்திராகமம் 17 ஆம் அதிகாரத்தில், ஆண்டவருடைய மக்கள் வனாந்தரத்திலே அலைந்துகொண்டு இருந்தார்கள், அங்கே தண்ணீரும் இல்லை. அவர்கள் மோசேவுக்கு எதிராக முறுமுறுத்து சாவதற்காக பாலைவனத்திற்கு கொண்டுவரப் பட்டார்களா என்று கேள்வி எழுப்பினார்கள். இந்த புகாரை மோசே தேவனாகிய கர்த்தரிடம் கொண்டு வந்தார், அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை தேவன் கூறினார். ஒரு குறிப்பிட்ட பாறையிடம் சென்று அதை தன் கோலினால் மோசே அடிக்க வேண்டும். அவ்வாறு அவர் செய்யும்போது, பாறையில் இருந்து தண்ணிர் வந்து, மக்களின் தேவைகளை தீர்க்கும். இந்த சம்பவம் நடந்த இடத்திற்கு மாசா மற்றும் மேரிபா என்று பெயர். "மாசா" என்றால் "சோதனை" "மேரிபா" என்றால் "சச்சரவு". தேவனாகிய கர்த்தரை மக்கள் சோதிக்கும்படி இவ்வாறு கூறியதாக யாத்திராகமம் 17:7 தெரிவிக்கின்றது:

> "கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா?"

> இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள்

கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்.

அவர்களுடைய தேவையின் போது, தேவனுடைய பிரசன்னத்தையும், ஆண்டவரின் கொடையையும், இஸ்ரவேல் மக்கள் சந்தேகித்தார்கள் என்பது தான் இங்கே புரிந்துகொள்ளப்படுகின்றது. இது அவர்கள் மோசேயிடம் கோபம் அடையும்படி செய்தது.

கர்த்தருடைய கொடையையும், பிரசன்னத்தையும் சந்தேகித்து அவர்கள் சச்சரவு செய்ததால், அவர்கள் தேவனை பரீட்சைபார்த்தார்கள். அவர் பல அற்புதமான காரியங்களை செய்வதை பார்த்து இருக்கிறார்கள். எகிப்தியர்கள் மண்டியிடும்படி செய்து, தொடர்ச்சியான அற்புத அடையாளங்கள் மூலமாக மக்களை விடுவித்தார். உலர்ந்த தரையில் அவர்கள் தப்பிச்செல்ல ஒரு வழியை உருவாக்கும்படியாக அவர் சமுத்திரத்தை திறந்தார். இவை வல்லமையான அடையாளங்கள்.

தேவனுடைய பிரசன்னத்தின் இந்த அடையாளங்களுக்கு மத்தியிலும், இஸ்ரவேல் தொடர்ந்து சந்தேகித்தது. தேவனுக்கும் அவருடைய பணிவிடைக்காரர் மோசேவுக்கு எதிரான கசப்பு உணர்வாகவும், கோபமாகவும் தங்களுடைய அவநம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள், இது தேவனாகிய கர்த்தருக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

அவருடைய கொடையையும், அக்கரையையும் சந்தேகப்பட்டு இஸ்ரவேல் தேவனை பரீட்சைபார்த்தார்கள். நம்முடைய தேவன் கிருபையின் தேவன் என்பதை புரிந்துகொண்டு உள்ளோம், ஆனால் அவருக்கும் நம்முடைய வாழ்க்கைக்காக அவர் வைத்திருக்கும் நோக்கத்திற்கும் சவால்விடுக்கும்போது, நாம் பெற்றுக்கொள்ள தகுதியானதை அவர் எப்படி கொடுப்பார்? ரோமர் 1:18-24 வசனங்களில் ஒரு முக்கியமான வேதபகுதி அடங்கி இருக்கிறது. இந்த வேதபகுதியில் தேவன் என்ன கூறுகிறார் என்பதை பாருங்கள்:

*சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப் படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துஎன்பவைகள், உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:18-24)*

தேவன் தன்னையும் தன்னுடைய குறிக்கோளையும் உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக பவுல் கூறுகின்றார். தேவனுக்கு செவிகொடுத்து, அவரை குறித்த அறிவுக்கு பதிலளிக்க மறுக்கும் ஆண்களும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் “சத்தியத்தை அடக்கிவைத்தவர்கள்”. அவர்கள் அதை அலட்சியம் செய்து, அவர்கள் விரும்புவதை செய்தார்கள். அவர்கள் ஆண்டவரை பற்றி அறிந்தும், அவரை

மகிமைப்படுத்த மறுத்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும் அவரை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் தங்களை ஞானிகள் என்று கூறியும், தேவனுடைய வழிகளுக்கு பதிலாக தங்கள் சொந்த வழிகளை தெரிந்துகொண்டார்கள். தேவனிடம் திரும்பாமல் இருந்ததும், அவர்களுடைய பிடிவாதமும் அவருடைய கோபத்தை தூண்டிவிட்டது. ரோமர்1:24ன் படி அவர்களுடைய பாவ இச்சைகளுக்கு அவர் அவர்களை ஒப்புக்கொடுத்தார். அவர்களிடம் இருந்து திரும்பி, அவர்கள் விரும்பியதை அவர்களுக்கு கொடுத்தார். உச்சகட்டமாக, அவருடைய ஆசீர்வாதம் அவர்களிடம் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போஸ்தலர் 5 ஆம் அதிகாரத்தில் அனனியா மற்றும் சபீராளின் கதை இருக்கிறது. மற்ற விசுவாசிகளைப் போல அவர்களும் தங்கள் சொத்துக்களை விற்று, ஏழைகளின் தேவைகளுக்கு விநியோகிக்கும்படி அந்த பணத்தை அப்போஸ்தலர்களிடம் கொடுத்தார்கள். தங்களுக்கென்று ஒரு பகுதியை வைத்துக்கொண்டார்கள், அது மட்டுமே பாவம் ஆகிவிடாது. தங்களுக்கென்று ஒரு பகுதியை வைத்துக்கொண்டதை மக்கள் பார்த்துவிட கூடாது என்று எண்ணி, அதை குறித்து அவர்கள் பொய் சொல்ல தீர்மானித்தார்கள். இந்த வஞ்சகத்தை கர்த்தர் பேதுருவுக்கு வெளிப்படுத்தினார், இந்த வஞ்சகத்திற்காக சாகும்படியாக கர்த்தர் அனனியாவை அடித்தார். அப்போஸ்தலர்களுக்கு கொண்டு வந்த பணத்தை குறித்து அனனியாவின் மனைவி சபீராளும் பொய் சொன்ன போது பேதுரு என்ன கூறினார் என்று பாருங்கள்.

பேதுரு அவளை நோக்கி:

> “கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே

வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்." (அப்போஸ்தலர் 5:9)

தன்னுடைய பொய்யினால் சபீராள் கர்த்தருடைய ஆவியை பரீட்சைபார்க்கிறாள் என்று பேதுரு கூறுவதை கவனியுங்கள் . பொய் சொல்லுவதில் விடாப்பிடியாக இருந்தது கர்த்தருக்கு கோபத்தை உண்டாக்கி, அவளுடைய மரணத்திற்கு வழிவகுத்தது.

இஸ்ரவேல் ஜனங்கள், தேவனாகிய கர்த்தரை எவ்வாறு பரீட்சைபார்த்தது என்பதற்கு அப்போஸ்தலர் பவுல் ஒரு உதாரணத்தை கொடுக்கிறார். 1 கொரிந்தியர் 10:7- 10 வசனங்களில் இவ்வாறு வாசிக்கிறோம்:

> ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்களென்று எழுதி இருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனதுபோல நீங்களும் ஆகாதிருங்கள். அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம் பேர் விழுந்து போனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக.
>
> அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். (1 கொரிந்தியர் 10:7-10)

9 ஆம் வசனத்திலே இஸ்ரவேலின் பாவத்தை கர்த்தரை பரீட்சைபார்ப்பதாக பவுல் குறிப்பிடுவதை கவனியுங்கள். கர்த்தருக்கு எதிராக பாவம்செய்வதன் மூலமாக பலர் தங்கள் ஜீவனை இழந்து இருக்கிறார்கள்.

அவருடைய வல்லமையை நினைவுகூறாமல் அவருடைய கட்டளைகளுக்கு எதிராக நடந்துகொண்ட போது தேவனாகிய

கர்த்தரை இஸ்ரவேலர்கள் எவ்வாறு பார்த்தார்கள் என்று சங்கீதக்காரர் கூறுகின்றார்:

அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள். அவருடைய கரத்தையும், அவர் தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள்.அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்களையும், சோவான் வெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்தார். அவர்களுடைய நதிகளை இரத்தமாக மாற்றி, அவர்களுடைய ஆறுகளிலுள்ள ஜலத்தைக் குடிக்கக் கூடாதபடி செய்தார். அவர்களை அழிக்கும்படி வண்டுஜாதிகளையும், அவர்களைக் கெடுக்கும்படி தவளைகளையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார். அவர்களுடைய விளைச்சலைப் புழுக்களுக்கும் அவர்களுடைய பிரயாசத்தின் பலனை வெட்டுக்கிளிகளுக்கும் கொடுத்தார்.

கல்மழையினால் அவர்களுடைய திராட்சச் செடிகளையும், ஆலாங்கட்டியினால் அவர்களுடைய அத்திமரங்களையும் அழித்து, அவர்களுடைய மிருகஜீவன்களைக் கல்மழைக்கும், அவர்களுடைய ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தார். தமது உக்கிரமான கோபத்தையும், மூர்க்கத்தையும், சினத்தையும், உபத்திரவத்தையும், தீங்குசெய்யும் தூதர்களையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார். அவர் தம்முடைய கோபத்துக்கு வழிதிறந்து, அவர்கள் ஆத்துமாவை மரணத்துக்கு விலக்கிக் காவாமல் அவர்கள் ஜீவனைக் கொள்ளைநோய்க்கு ஒப்புக்கொடுத்தார்.

எகிப்திலே தலைச்சன்கள் அனைத்தையும், காமின் கூடாரங்களிலே அவர்களுடைய பெலனில் முதற்பலனான யாவையும் அழித்து; தம்முடைய ஜனங்களை ஆடுகளைப்போல் புறப்படப்பண்ணி, அவர்களை

*வனாந்தரத்திலே மந்தையைப்போல் கூட்டிக் கொண்டுபோய்; அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழிநடத்தினார்; அவர்கள் சத்துருக்களைக் கடல்மூடிப்போட்டது. அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும், தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வதமட்டுக்கும் அழைத்துக் கொண்டுவந்து, அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்திவிட்டு, தேசத்தை நூல்போட்டுப் பங்கிட்டு, அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார். ஆனாலும் அவர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சைபார்த்து, அவருக்குக் கோபம் மூட்டி, அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற்போய், (சங்கீதம் 78:41-56)*

பல வழிகளில் நாம் தேவனாகிய கர்த்தரை பரீட்சைபார்க்க முடியும். நம்மை சுற்றி அவருடைய வல்லமை இருக்கிறது என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கும்போது, நம்முடைய அவநம்பிக்கையால் அவரை பரீட்சைபார்க்க முடியும். பாவத்திலும், மீறுதலிலும் பிடிவாதமாக இருப்பதன் மூலம் அவரை நாம் பரீட்சைபார்க்க முடியும். தேவனாகிய கர்த்தரை பரீட்சைபார்ப்பது மிகவும் ஆபத்தான காரியம். இவ்வாறு செய்த பலர் தங்கள் வாழ்வை இழந்துள்ளார்கள் என்று நமக்கு முன்பாக இருக்கும் உதாரணங்கள் வெளிப்படுத்துகின்றன.

நாம் பதில்சொல்ல வேண்டிய கேள்வி லூக்கா 4:12ல் இருக்கிறது:

*தேவாலயத்தின் உயரமான இடத்தில் இருந்து குதிப்பதன் மூலம் பிதாவை இயேசு எவ்வாறு பரீட்சைபார்த்து இருப்பார்? நாம் ஆய்வுசெய்த மேற்கண்ட வசனங்களில் இதற்கான விடை இருப்பது போல தோன்றுகிறது.*

முதலாவதாக, பிதாவானவர் அழைக்காத ஒன்றை செய்வதன் மூலமாக இயேசு பிதாவை பரீட்சைபார்த்து இருப்பார். இயேசு தேவாலயத்தில் இருந்து குதிக்க வேண்டும் என்று பிதா கேட்டுக்கொள்ளவில்லை. இயேசுவை குறித்த பிதாவின் சித்தமும், குறிக்கோளும் இதுவல்ல. நான் பாவத்தில் விழுந்தபோதும் தேவனாகிய கர்த்தர் என்னை பாதுகாத்தாரே என்பதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவர் எனக்கு அமைத்து கொடுத்த பாதையில் இருந்து அலைந்துதிரிந்த போதும், அவர் தந்த கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் நான் அவரை துதிக்கிறேன். நான் வேண்டுமென்றே பாவம் செய்து, தேவனிடம் இருந்து அலைந்து திரியும்போதெல்லாம் இந்த பாதுகாப்பை நான் எதிர்பார்க்க வேண்டுமா? பவுலுடைய காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களை ஒழுக்கக்கேட்டிற்கு ஒப்புக்கொடுத்தார்கள், ஆகவே தேவன் அவர்களுடைய இச்சைக்கு அவர்களை ஒப்புக்கொடுத்தார் என்று ரோமர் 1 ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். அனனியாவும் சபீராளும் வேண்டுமென்றே திருச்சபையிடம் பொய் சொல்லி, அந்த பொய்யிலே பிடிவாதமாக இருந்த போது, சாகும்படியாக கர்த்தர் அவர்களை அடித்தார். சரியானது எது என்று தெரிந்தும், வேண்டும் என்றே தேவனுக்கு எதிராக மீறுதல் செய்ய தீர்மானிக்கும்போது எல்லாம், தேவன் நம்மை காப்பாற்றுவார் என்று என்ன உறுதி இருக்கின்றது?

நம்முடைய முட்டாள்தனமான தீர்மானங்களில் இருந்து நம்மை காப்பாற்ற வேண்டும் என்று தேவனுக்கு ஏதேனும் நிபந்தனை இருக்கின்றதா? வெளிப்படையாக அவரை எதிர்த்து நிற்கும்போது தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பது மடமை என்பதை இயேசு அறிந்திருந்தார். தேவாலயத்தில் இருந்து குதித்து இயேசு தேவனை பரீட்சைபார்க்க மாட்டார். அவருடைய வாழ்க்கையில் இது தேவனுடைய வழிநடத்துதலும் நோக்கமும் இல்லை.

இரண்டாவதாக, சாத்தான் மேற்கோள் காட்டிய வேதவாக்கியம் உண்மை என்று இயேசு நிரூபிக்க

முயற்சிசெய்ய வைக்க வேண்டும் என்று முயற்சித்தான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். வேதவாக்கியம் உண்மை என்பதை நிரூபிக்க இயேசு தேவாலயத்தில் இருந்து குதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த வேதவாக்கியங்கள் அவருடைய பிதாவின் வார்த்தைகள் என்பதால், அவர் அவற்றை நம்பினார். கர்த்தர் இயேசு, இவ்வுலகில் ஊழியம் செய்த போது, அவர் சொல்வதை நம்புவதற்கு முன்பாக அடையாளங்கள் கேட்டவர்களினால் தொடர்ச்சியாக அவர் கோபம் அடைந்தார் (மத்தேயு 12:39; 16:4 பார்க்க) நமக்கு இன்னும் என்ன சான்று தேவைப்படுகின்றது? தேவனுடைய வார்த்தை மட்டுமே நமக்கு தேவையானது. அவர் சொல்வதை நாம் நம்பலாம். தேவன் அவருடைய வார்த்தையை காப்பாற்றுவாரா என்பதை சந்தேகிக்க நம்மிடம் எந்த காரணமும் இல்லை.

எபிரேயருக்கு நிருபம் எழுதியவர், காணப்படாதவைகளின் நிச்சயமே விசுவாசம் என்று விவரிக்கிறார்.

> விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரேயர் 11:1)

பார்க்க முடியாததை உண்மையான விசுவாசம் ஏற்றுக்கொள்கின்றது. அது நிரூபிக்கப்பட்டது என்பதால் அல்ல, தேவன் வாக்குதத்தம் செய்து இருக்கிறார் என்பதால் அது நம்புகின்றது. நம்முடைய கண்களும் நம்முடைய உணர்வுகளும் நம்மை வஞ்சிக்கலாம், ஆனால் தேவனுடைய வார்த்தை எப்போதுமே உண்மையானதாகவும், நம்பக்கூடியதாகவும் இருக்கும். தேவாலயத்தில் இருந்து குதிப்பதன் மூலம் தேவனுடைய வார்த்தையை உண்மை என்று நிரூபிக்க வேண்டிய அவசியம் இயேசுவுக்கு இல்லை. தேவனுடைய வார்த்தை எப்போதுமே நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் எப்போதுமே இருக்கக் கூடாது. நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவது அதன் உண்மையை சந்தேகிப்பதாக இருக்கும். தேவனுடைய வார்த்தையை காட்டிலும் உறுதியானது வேறு

எதுவும் இல்லை. மத்தேயு 24 ஆம் அதிகாரத்தில் இயேசு இதை வெளிப்படுத்துகிறார், அப்போது அவர் கூறியதாவது:

வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. (மத்தேயு 24:35)

வானத்தையும், பூமியையும் காட்டிலும் தேவனுடைய வார்த்தை உண்மையுள்ளது. இந்த பூமியும், நான் அறிந்த அனைத்தும் ஒருநாள் கடந்துசெல்லும், ஆனால் தேவனுடைய வார்த்தையும் அவருடைய வாக்குதத்தங்களும் எப்போதும் உண்மையுள்ளதாக இருக்கும்.

தன்னுடைய பிதாவின் வார்த்தை நம்பகத்தன்மை உடையது என்பதை நிரூபிக்க இயேசு தரம்கெட்ட செயல்களில் ஈடுபடமாட்டார். அவருடைய பிதா கூறிய வார்த்தைகளை சந்தேகிக்க எவ்வித காரணமும் இல்லை. இன்றைய நாளில் தேவனுடைய வார்த்தை மீது இத்தகைய தைரியம் நமக்கு இருக்க வேண்டும்

## கருத்தில்கொள்ள வேண்டியவை:

- உங்கள் மேல் இருக்கும் தேவனுடைய அக்கறையை அல்லது அவருடைய வார்த்தையின் உண்மையை என்றாவது நீங்கள் சந்தேகப்பட்டது உண்டா? விவரிக்கவும்.

- தேவனை பரீட்சைபார்ப்பது என்றால் என்ன? தேவனை பரீட்சைபார்த்த சில வேதாகம மக்களின் உதாரணத்தை கொடுக்கவும்? விளைவு என்ன?

- நாம் அவருக்கு கீழ்ப்படிந்து நடக்காதபோது, தேவனுடைய ஆசீர்வாதத்தையும், அவருடைய பாதுகாப்பையும் எதிர்பார்க்கும் உரிமை நமக்கு இருக்கின்றதா?

- தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்க நமக்கு ஏதேனும் காரணம் இருக்கின்றதா? அவருடைய வார்த்தையின் நம்பகத்தன்மை பற்றி இயேசு என்ன போதிக்கிறார்?

• தேவாலயத்தின் உயரமான இடத்தில் இருந்து குதிப்பதன் மூலம் இயேசு தேவனை எவ்வாறு பரீட்சைபார்த்திருப்பார்?

## ஜெபிப்பதற்காக:

• நம்முடைய பாவங்களையும் தோல்விகளையும் அவருடைய கிருபை மூடிக்கொள்வதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். அவருடைய கிருபையையும், பாதுகாப்பையும் எப்போதுமே அலட்சியமாக எடுத்துக்கொள்ளாதபடி அவரிடம் உதவுமாறு வேண்டிக்கொள்ளுங்கள். கீழ்ப்படிதலோடும், பயபக்தியோடும் நடக்க கற்றுத்தருமாறு அவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

அவிசுவாசம் அல்லது உங்கள் வாழ்க்கையில் உள்ள மீறுதல்களினால் தேவனை பரீட்சைபார்த்த சமயங்களுக்காக அவரிடம் மன்னிப்பை வேண்டிக்கொள்ளுங்கள்.

• அவருடைய வார்த்தையின் உண்மைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். அது வானத்தையும் பூமியையும் விட உறுதியானது என்பதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவருடைய வார்த்தை மீது அதிக நம்பிக்கை அளிக்குமாறு அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

# 8

# ஒரு சரியான சந்தர்ப்பம்

*பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான். (லூக்கா 4:13)*

நாற்பது நாட்கள் கர்த்தர் இயேசு வனாந்தரத்திலே பிசாசினால் சோதிக்கபப்ட்டார். அச்சமயம் அவர் தன்னுடைய பிதாவின் நோக்கத்தையும் சித்தத்தையும் நம்பி, வெற்றிகரமாக சத்துருவை வீழ்த்தினார். சிறப்பான முயற்சி எடுத்தும், பிசாசினால் இயேசுவின் வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க முடியவில்லை. அவருடைய ஒவ்வொரு சோதனையையும் இயேசு வெற்றிகரமாக எதிர்கொண்டார்.

இயேசுவை சோதித்து முடிந்த பிறகு, சரியான நேரம் வரும்வரை அவரை விட்டு விலகிப்போனான் என்று வசனம் 13ல் குறிப்பிடப்பட்டு இருப்பதை கவனியுங்கள் . இந்த வசனத்தில் இருந்து பிசாசை குறித்தும் அவனுடைய தந்திரங்களை குறித்து சில குறிப்புகளை நாம் ஏற்படுத்துவோம்.

## பிசாசின் காலம் குறைவானது

இந்த வசனத்தில் இருந்து நாம் பார்க்க வேண்டிய முதலாவது காரியம், பிசாசின் காலம் குறைவானது. கர்த்தர் இயேசுவை சோதிக்க அவனுக்கு நாற்பது நாட்கள் இருந்தன என்பதை இந்த சூழ்நிலையில் இருந்து நாம் புரிந்துகொள்கிறோம். வேதாகமத்தில் பல இடங்களில் 40

என்னும் எண்ணிக்கை இடம்பெறுகின்றது. கர்த்தர் இயேசுவை குறித்து பேசும்போது, அப்போஸ்தலர் புத்தகத்தை எழுதியவர், உயிர்த்தெழுந்த பிறகு பிதாவிடம் செல்லும் முன்னதாக நாற்பது நாட்கள் இயேசு தன்னை வெளிப்படுத்தினார் என்று கூறுகின்றார்.

> அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். (அப்போஸ்தலர் 1:5)

> வாக்குதத்தம் செய்யப்பட்ட இடத்திற்குள் நுழைவதற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்திலே அலைந்து திரிந்தார்கள் (அப்போஸ்தலர் 7:36 பார்க்க).

ஆதியாகமம் புத்தகத்திலே தேவன் பூமியை நியாயம்தீர்த்தபோது, நாற்பது நாட்கள் பூமியின் மீது மழையை அனுப்புவதாக அவர் நோவாவிடம் கூறினார்.

> இன்னும் ஏழுநாள் சென்றபின்பு, நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, நான் உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவேன் என்றார். (ஆதியாகமம் 7:4)

பத்து கட்டளைகளை கொடுப்பதற்காக தேவன் மோசேயை மலையின் மீது ஏறிவரச் சொன்னார். நாற்பது நாட்கள் தேவனாகிய கர்த்தரின் பிரசன்னத்திலே உணவு இல்லாமல் மோசே தங்கி இருந்தார்.

> அப்பம் உண்ணாமலும், தண்ணீர் குடிக்காமலும் நாற்பது நாள் இரவும் பகலும் மோசே கர்த்தரோடு இருந்தார். அங்கே உடன்படிக்கையின் வார்த்தைகளாகிய

*பத்து கட்டளைகளை கற்பலகைகளிலே அவர் எழுதினார். (யாத்திராகமம் 34:28)*

*ஒரு காரணத்தோடு இந்த வசனங்களுக்கு நேராக உங்கள் கவனத்தை நான் ஈர்த்தேன். நாற்பது நாட்கள் பிசாசு நடத்திய சோதனை வெறும் தற்செயலான எண்ணிக்கை அல்ல. கர்த்தரை சோதிக்க பிதாவானவர் சாத்தானுக்கு கொடுத்த நாட்களின் எண்ணிக்கை அது. சாத்தானின் காலம் வரையுறக்கபட்டது. இந்த சம்பவங்களுக்கு பிறகு வனாந்தரத்தில் இருந்து ஊழியத்திற்கு இயேசு வழிநடத்தப்படுவார். இந்த காலத்தை தாண்டி செல்ல சாத்தானுக்கு அனுமதி கிடையாது.*

*தன்னுடைய காலம் குறைவாக இருப்பதால் பிசாசு தன்னுடைய கோபம் அனைத்தையும் வெளிப்படுத்தும் சித்திரத்தை வெளிப்படுத்தல் 12:12 அளிக்கின்றது.*

*“ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் ஆத்திரமுண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும்.” (வெளிப்படுத்தல் 12:12)*

*பிசாசு அவனுடைய காலத்தை கட்டுப்படுத்துவது இல்லை. அவன் என்ன செய்ய முடியும், எவ்வளவு காலம் செய்ய முடியும் என்பதற்கு தேவன் கட்டுப்பாடுகளை விதித்து இருக்கிறார். இயேசு வனாந்தரத்தில் இருந்த சம்பவத்தை பொருத்தவரை, சாத்தானுடைய காலம் முடிவடைந்தது, அவன் வெளியேறும்படி நிர்பந்திக்கப்பட்டான்.*

*நம்முடைய வாழ்க்கையில் துன்பங்கள் நேரிடும்போதும் தேவனாகிய கர்த்தர் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என்பது நமக்கு ஊக்கம் அளிக்கின்றது.*

## பிசாசு விட்டுக்கொடுப்பது இல்லை

வசனம் 13ல் நாம் பார்க்க வேண்டிய இரண்டாம் விவரம், பிசாசின் காலம் குறைவாக இருப்பதால், அவன் விட்டுக்கொடுப்பது இல்லை. அவன் இயேசுவை விட்டு விலகிச் சென்றான், ஆனாலும் சரியான சந்தர்பத்திற்காக காத்திருந்தான் என்று வசனம் கூறுகின்றது. அவருடைய ஊழியக்காலம் முழுவதுமாக இயேசுவை அவன் தொடர்ந்து சோதித்து பரீட்சைபார்த்துக்கொண்டே இருப்பான்.

அந்நாட்களில் இருந்த மதத்தலைவர்களை ஏவிவிட்டு இயேசுவுக்கும் அவருடைய போதனைக்கும் சவாலை ஏற்படுத்துவான். அவரை சோதிக்கவும் கொலைசெய்யவும் வழிவகை தேடி அடிக்கடி அவர்கள் இயேசுவிடம் வந்தார்கள். இதன் பின்னணியில் பிசாசு இருக்கிறான் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். உண்மையில், அவர்களுடைய பிதா பிசாசு என்றும், அவர்கள் அவனுடைய சித்தத்தை செய்கிறார்கள் என்றும் இயேசு மிகவும் தெளிவாக கூறுகின்றார்.

> நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.(யோவான் 8:44)

சில நேரங்களில், இயேசுவையும் அவருடைய சீடர்களையும் சுற்றி மக்கள் கூட்டம் நின்றுகொண்டு, அவர்களுடைய நேரத்தையும் சக்தியையும் வீணாக்கினார்கள். சில நேரங்களில் அவர்களுக்கு சாப்பிடக்கூட நேரம் கிடைக்கவில்லை. இயேசுவையும் அவருடைய ஊழியத்தையும் குறித்து தவறான குற்றச்சாட்டுகள் பரவின.

*பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள். அவருடைய இனத்தார் இதைக்கேட்டபோது, அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி அவரைப் பிடித்துக்கொள்ளும்படி வந்தார்கள். எருசலேமிலிருந்து வந்த வேதபாரகர்: இவன் பெயெல்செபூலைக்கொண்டிருக்கிறான். பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள். (மாற்கு 3:20-22)*

மாற்கு 3:20-22 வரை வாசிக்கும்போது, சாத்தானின் தாக்கத்தை பார்ப்பது கடினமான காரியம் அல்ல. இயேசுவுக்கும் அவருடைய சீடர்களுக்கும் சாப்பிடவும் நேரம் இல்லை. அவருடைய குடும்பத்தார், "அவர் மதிமயங்குகிறார்" என்று குற்றம்சாட்டினார்கள். மதத்தலைவர்கள் அவர் பிசாசு பிடித்தவர் என்றார்கள். இந்த காரியங்கள் அனைத்தும் பிசாசிடம் இருந்து வந்தன.

இயேசு சிலுவைக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று அவருடைய சீடர்களில் ஒருவரான பேதுருவே ஒரு கட்டத்தில் கூறுவதை நாம் பார்க்கிறோம். அன்று பேதுருவுக்கு இயேசு அளித்த பதில் ஆச்சரியம் அளிக்கின்றது:

*அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார். (மத்தேயு 16:22-23)*

பேதுருவை பார்த்து இயேசு சாத்தானை குறிப்பிட்டு பேசுவதை கவனியுங்கள்.

இங்கே மீண்டுமாக பேதுருவின் வார்த்தைகளை வைத்து இயேசுவை சோதிக்க சத்துரு முயற்சிப்பதை நாம் பார்க்கலாம்.

லூக்கா 22:3-4 வசனங்களில், சாத்தான் யூதாசுக்குள் புகுந்துமதத்தலைவர்களிடம் கர்த்தர் இயேசுவை காட்டிக்கொடுக்கும்படி செய்கிறான்.

> அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்.
>
> அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான். (லூக்கா 22:3-4)

சாத்தான் தன் தோல்வியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தான் நாம் இங்கே பார்க்க வேண்டும். வனாந்தரத்திலே இயேசுவை விட்டுவந்தாலும், அவரை சோதிப்பதை அவன் நிறுத்துவதாக இல்லை. காலம் முடியும் வரை, சாத்தான் செயல்பட்டுக்கொண்டே இருப்பான், இவ்வுலகில் கிறிஸ்துவின் பணியை அழிக்கவும் தடைசெய்யவும் வகைதேடுவான். நம்முடைய கவசத்தை நாம் கீழே விட்டுவிடக்கூடாது.

## பிசாசு கவனித்துக்கொண்டு இருக்கிறான்

இந்த வேதபகுதியில் சரியான சந்தர்பத்திற்காக பிசாசு கவனமாக இருக்கிறான் என்பதை கவனியுங்கள். இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை "கெய்ரோஸ்" என்னும் கிரேக்க வார்த்தை. இந்த வார்த்தை ஒரு "காலம்", "நிர்ணயிக்கப்பட்ட அல்லது சரியான காலம்" அல்லது "வாய்ப்பு" என்னும் அர்த்தங்களை கொடுக்கும். தாக்குதல் செய்வதற்கு சரியான நேரத்தை பிசாசு எதிர்நோக்கி இருக்கிறான் என்பது தான் இதன் கருத்து.

இயேசுவின் அசைவுகளை சாத்தான் பின் தொடர்ந்துகொண்டு இருந்தான் என்பது உறுதி. அவரை நோக்கி சோதனையின் அம்புகளை எறிவதற்கு எவ்வித வாய்ப்பையும் அவன் பயன்படுத்திடுவான். அவரை சுற்றி கூட்டமாக நின்றுகொண்டு இருக்கும் மக்கள் அவரிடம் பேசும் வார்த்தைகள், தன்னுடைய சீடர்களோடு அமைதியாக செலவு செய்யும் நேரங்கள் ஆகியவற்றில் வார்த்தைகளாக இவை வரலாம். அம்பை எறிவதற்கு எப்போதெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்போதெல்லாம் சாத்தான் அதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வான்.

கர்த்தர் இயேசுவுக்கு நடந்தது, நமக்கும் நடைபெறும். நம்மை நோக்கி அம்புகளை எறிவதற்கு பிசாசு சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருக்கிறான் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். நாம் பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் நொடிப்பொழுதில், அவனுடைய அம்பு நம்முடைய மனதையும் உடலையும் ஊடுருவதை நாம் உணர முடியும். நாம் எதிர்பாராத நேரத்தில், ஒரே விநாடியில், அந்த அம்பு நம்மை நோக்கி பறந்து வரும். மகத்தான ஊழிய வெற்றியின் நேரத்திலும் அது வரலாம் அல்லது கடுமையான போராட்டத்தின்போதும் அது வரலாம். சாத்தானும் அவனுடைய தூதர்களும் நம்மை வீழ்த்துவதற்கான சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருக்கிறார்கள் என்பதை மாத்திரம் நாம் உறுதியாக கூற முடியும். இந்த காலகட்டங்களில் பிதாவின் பாதுகாப்பு நமக்கு எவ்வளவாய் தேவைப்படுகின்றது. வழிகாட்டுதலுக்கும், வழிநடத்துதலுக்கும் எவ்வளவாய் நாம் அவரை பற்றுக்கொண்டு இருக்க வேண்டும்.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

- உண்மையாகவே பிசாசு எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறானா? அவனுடைய செயல்பாடுகளை தேவனாகிய கர்த்தர் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றார்?

• சாத்தான் தேவனால் கட்டுப்படுத்தப்படுகிறான் என்கிற உண்மையில் என்ன ஆறுதல் உங்களுக்கு கிடைக்கின்றது ?

• சாத்தானின் விடாமுயற்சியை குறித்து இந்த அத்தியாயத்தில் நாம் என்ன கற்றுக்கொள்கிறோம் ? அவன் தோல்வி அடைந்துவிட்டதை அறிந்தாலும், அவன் விட்டுகொடுத்துவிடுகிறானா?

• சாத்தான் தாக்குதல் செய்யக்கூடிய வழிமுறைகள் சில என்னென்ன? உங்கள் சமுதாயத்திலும், உங்கள் சபை குழுவிலும் அவனுடைய செயல்பாட்டுக்கான சான்றுகளை உங்களால் பார்க்க முடிகின்றதா?

• சாத்தான் தாக்குதல் நடத்தக்கூடிய பாதுகாப்பற்ற இடங்கள் உங்கள் வாழ்க்கையில் இருக்கின்றனவா?

## ஜெபிப்பதற்காக:

• நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் கர்த்தரின் கட்டுப்பாட்டில் இருப்பதற்காகவும், சாத்தானும் அவருக்கு பணிய வேண்டியவனாக இருப்பதற்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.

• சத்துருவின் தாக்குதலுக்கு உட்படக்கூடிய உங்கள் வாழ்க்கையின் திறந்த இடங்களை காண்பிக்கும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

உங்கள் பலமான பகுதிகளையும் சத்துரு தாக்கக்கூடும் என்பதால் தேவன் உங்களை பாதுகாக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள்.

• ஒவ்வொரு நாளும் நீங்கள் வாழும்போது உங்களுக்கு ஞானமும், வழிநடத்துதலும் வழங்க வேண்டும் என்று கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள். சத்துருவின் தற்போதையை சோதனைகளில் இருந்து பாதுகாப்பு தரும்படி வேண்டிக்கொள்ளுங்கள்.

- சத்துரு உங்கள் மீது தாக்குதல் நடத்தும் குறிப்பிட்ட பகுதிகள் ஏதேனும் இருக்கின்றனவா? உங்கள் வாழ்க்கையில் இந்த பகுதிகள் அனைத்தையும் தேவனாகிய கர்த்தரிடமும் அவருடைய குறிக்கோளுக்கும் ஒப்புக்கொடுங்கள். இந்த குறிப்பிட்ட பகுதிகளில் உங்களை உண்மையுள்ளவர்களாக வைத்துக்கொள்ள தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

# 9

# ஆவியும் உண்மையும்

இந்த இறுதி அத்தியாயத்திலே, கர்த்தர் இயேசு பிசாசின் சோதனைகளை வனாந்தரத்திலே மேற்கொண்டவற்றை, சுருக்கமாக கூறலாம் என்று விரும்புகிறேன். இரண்டு முக்கியமான கொள்கைகளின் காரணமாக லூக்கா 4:1-13 வரை குறிப்பிடப்பட்டுள்ள பிசாசின் மீதான கிறிஸ்துவின் வெற்றி விளைந்தது. முதலாவது, அவர் ஆவியினால் வழிநடத்தப்பட்டார். இரண்டாவது, அவர் வார்த்தையினால் வழிநடத்தப்பட்டார். இந்த இரண்டு கொள்கைகளும் கவனிக்கத் தவறும் அளவுக்கு மிகவும் எளிமையானவை, ஆனால் இவை தான் கிறிஸ்துவின் பலத்துக்கும், வெற்றிக்கும் ஆதாரமாக இருக்கின்றன. அவருடைய உதாரணத்தை பின்பற்றினால் இவை நம்முடைய வெற்றிக்கும் ஆதாரமாக விளங்கும். இந்த வேதவாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல இந்த கொள்கைகளை கருத்தில்கொள்ள ஒரு நிமிடம் எடுத்துக்கொள்வோம்.

## ஆவியினால் வழிநடத்தப்படுதல்

இயேசுவின் சோதனை சம்பவம் எவ்வாறு துவங்குகின்றது என்பதை கவனியுங்கள்:

> இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய், யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு, நாற்பதுநாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர்

*ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. (லூக்கா 4:1)*

இந்த இரண்டு வசனங்களிலும் நான் முன்பே குறிப்பிட்டவற்றை திரும்பவுமாக கூறுவது என்னுடைய நோக்கம் அல்ல. இருப்பினும், இந்த வசனங்களில் இருக்கும் இரண்டு காரியங்களை குறிப்பிடுவது அவசியம் :

- இயேசு பரிசுத்த ஆவினால் நிறைந்து இருந்தார்.
- இயேசு ஆவியினால் நடத்தப்பட்டார்.

இவ்விரண்டு வாக்கியங்களும் நாற்பது நாட்களும் பிசாசின் சோதனைகளை இயேசு எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை நமக்கு கூறுகின்றன.

முதலாவது, அவர் பரிசுத்த ஆவினால் நிறைந்து இருந்தார். ஆவியில் நிறைந்து இருக்க வேண்டும் என்றால், நாம் நம்மையே வெறுமையாக்க வேண்டும் என்கிற உண்மையை முன்பே விவாதித்துவிட்டோம்.

பரிசுத்த ஆவி தன்னுடைய வாழ்வின் ஆண்டவராக இருக்கும்படி, சுயவிருப்பத்தோடு இயேசு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவருடைய நோக்கங்களும், சிந்தனைகளும், செயல்களும் ஆவியானவருக்கு கட்டுப்பட்டு இருந்தன. தேவனுடைய ஆவியானவருக்கு அர்ப்பணிப்பதன் மூலம் கிடைக்கும் நிறைவு, சத்துருவுக்கு எதிரான சக்திவாய்ந்த கருவி.

பிசாசின் சோதனைகள் மீது வெற்றி கிடைக்க வேண்டும் என்றால், அர்ப்பணிப்பதன் மூலம் கிடைக்கும் ஆவியின் நிறைவை நாமும் அறிந்துகொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கை பிசாசின் போர்க்களம். ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையில் அதிகம் அதிகமான இடங்களை கைப்பற்ற அவன் வகைதேடுகிறான். இந்த தாக்குதல்களை நாம் எவ்வாறு கையாளுவது? தேவனுடைய ஆவியானவருக்கு நம்முடைய

வாழ்வை ஒப்புக்கொடுப்பதன் மூலம் நாம் அதை கையாளுகிறோம். நம்முடைய வாழ்வுக்கான உரிமையை தேவனிடம் கொடுத்து, நம்முடைய உரிமைகளுக்கு நாம் மரித்து போகிறோம். நம்முடைய மனதிலும், சித்தத்திலும் இருக்கும் ஒவ்வொரு மலைமீதும், பள்ளத்தாக்கு மீதும், குகை மீதும் பிளவுகள் மீதும் ஆவியானவர் முழுமையான கட்டுப்பாட்டை பெற்றுக்கொள்ள நாம் அழைப்புவிடுக்கிறோம். ஒவ்வொரு மூலையையும் அவருடைய ஒளியினால் நிரப்பவும், அவருடைய முழுமையான கட்டுக்குள் நம்மை ஒப்புக்கொடுக்கவும் நாம் அவரை அழைக்கிறோம்.

பரிசுத்த ஆவியை முழுமையாக பெற்றுக்கொண்டு வனாந்தரத்திலே இயேசு சோதனைகளை சந்தித்தார். மனமும், சித்தமும் தேவனுடைய ஆவியானவருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு, அவரால் கட்டுப்படுத்தப்பட்டு வனாந்தரத்திற்கு உள்ளே அவர் சென்றார். அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு மூலையிலும் தேவனுடைய ஆவியானவரின் பிரசன்னம் வெளிப்படையாக இருந்தது. சத்துருவை கைப்பற்றி, அவனுடைய சோதனைகள் மீது வெற்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றால், முதலில் இந்த காரியத்திற்கு நாம் தீர்வு ஏற்படுத்த வேண்டும். நம்முடைய வாழ்வையும், மனதையும், சித்தத்தையும் பரிசுத்த ஆவியிடம் நாம் ஒப்புக்கொடுப்போமா? நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமானத்திற்குள்ளும் வரும்படி கர்த்தரை நாம் அழைத்து, அவருடைய சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் கீழ்ப்படிந்தவர்களாக நடப்போமா? ஆவியானவரால் கைப்பற்றப்படாத இடங்கள் இருக்கும்வரை, பிசாசு நம்முடைய வாழ்விலே அடிவைப்பதற்கு இடம் இருந்துகொண்டே இருக்கும்.

இரண்டாவதாக, ஆவியினால் நடத்தப்பட்டு இயேசு வனாந்தரத்திற்குள் சென்றார் என்பதை கவனியுங்கள். இயேசு சுயமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆவியானவரின் நடத்துதலுக்கு அவர் கீழ்ப்படிந்து நடந்தார். எதையாகிலும்

சொல்லக்கூடாது அல்லது செய்ய கூடாது என்று மென்மையாக தட்டும் ஆவியானவரின் எச்சரிக்கையை என்றாவது நீங்கள் உணர்ந்து இருக்கிறீர்களா? இந்த தட்டுதலை நான் உணர்ந்தும், அலட்சியம் செய்த காலங்கள் உண்டு. ஒருவேளை இதுவரை அழைக்கப்படாத ஊழியத்தில் நீங்கள் இருக்கக்கூடும்? ஒருவேளை ஆவியானவரின் உந்துதலை அலட்சியம் செய்துவிட்டு, உங்கள் வாழ்க்கையில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் நபரோடு ஐக்கியம் கொண்டு இருக்கலாம். ஆவியானவரின் நடத்துதலை கேட்க நம் காதுகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டியது எவ்வளவு அவசியமானதாக இருக்கின்றது. நாம் எங்கு இருக்க வேண்டுமோ அங்கே அவர் நம்மை வழிநடத்துவார். நாம் பார்க்க வேண்டியதை அவர் நமக்கு காட்டுவார். ஆபத்துகளை குறித்து அவர் எச்சரிப்பார். உண்மைக்குள் நம்மை அவர் வழிநடத்துவார்.

ஆவியானவரின் சித்தத்தினால் இயேசு வனாந்தரத்திலே இருந்தார். ஆவியினால் நடத்தப்படுவதால் நாம் சோதிக் கப்படவே மாட்டோம் என்று அர்த்தம் இல்லை. இது லூக்கா 4:1- 13 வசனங்களில் இருந்து தெளிவாக தெரிகின்றது. வாழ்க்கையின் பள்ளத்தாக்குகள் வழியாக நம்முடைய பாதையை கண்டுபிடிக்க, ஆவியின் நடத்துதல் நமக்கு உதவியாக இருக்கும்.

தேவனுடைய ஆவியானவர் நம்மை வெற்றியின் பாதையில் நடத்துவார். தேவன் விரும்பும் வெற்றியிலே நடக்க, நம்மை அவர் எச்சரிப்பார், குற்றவுணர்வு ஊட்டுவார், அதற்கு தேவையான ஞானத்தைக் கொடுப்பார். ஆவியினால் நடத்தப்பட்டு இயேசு வனாந்தரத்திற்குள் சென்றார். அவர் செவிகொடுத்து, கீழ்ப்படிதலோடு நடந்தபடியால் அந்த வனாந்தரத்திலே ஆவியினால் நடத்தப்பட்டார்.

பிசாசின் சோதனைகள் மீது நாம் வெற்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றால், நாம் ஆவியில் நிறைந்தவர்களாக, அவருடைய நடத்துதலுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

தேவனுடைய ஆவியானவருக்கு நம்முடைய வாழ்வையும் சித்தத்தையும் ஒப்புக்கொடுத்து, நம்முடைய பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் அவருக்கு உரிமை அளிப்பதே இதன் அர்த்தம். நம்முடைய சுயத்திற்கு மரித்து, அவருடைய வார்த்தைக்கும் வழிநடத்துதலுக்கும் நம் வாழ்வை ஒப்புக்கொடுப்பதே இதன் பொருள்.

## வார்த்தையினால் வழிநடத்தப்படுதல்

நாற்பது நாட்களும் சத்துருவின் சோதனைகள் மீது இயேசு வெற்றிபெற்றதற்கான இரண்டாவது மகத்துவமான காரணம் இந்த வேதபகுதியில் மூன்று இடங்களில் காணப்படுகின்றது. கல்லை அப்பமாக மாற்ற வேண்டும் என்று சோதிக்கப்பட்டபோது, கர்த்தர் இவ்வாறு பதிலளித்தார்:

> "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" என்றார் (வசனம் 4).

பிசாசு அவரை உயர்ந்த இடத்திற்கு கொண்டு சென்று, உலகத்தின் ராஜ்யங்கள் அனைத்தையும் காண்பித்தபோது, இயேசு இவ்வாறு பதிலளித்தார் : "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார். (வசனம் 8) இறுதியாக தேவாலயத்தின் உயரமான இடத்தில் இருந்த்து குதிக்கும்படி சோதிக்கப்பட்டபோது, இயேசு இவ்வாறு கூறினார்: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே என்றார். (வசனம் 12). இந்த வசனங்கள் அனைத்திலும் பொதுவாக இருக்கும் அம்சத்தை பாருங்கள். ஒவ்வொரு முறையும் கர்த்தர் இயேசுவை பிசாசு சோதித்தபோது, வேதவாக்கியங்கள் என்ன கூறுகின்றன என்று அவர் திரும்பி பார்த்தார்.

வேதவாக்கியங்களின் அறிவினால் இயேசு வழிநடத்தப்பட்டார். வேதவாக்கியங்களை அவற்றின்

பின்னணிக்கு புறம்பாக சாத்தான் பயன்படுத்தியபோது இயேசு அதை உடனடியாக பார்த்தார். தான் சந்தித்த சோதனையிலே பிதாவின் நோக்கத்தை அறிந்துகொள்ளும் அளவுக்கு அவருக்கு போதிய வேத அறிவு இருந்தது. அந்த வேதவாக்கியங்கள் போதித்தவற்றுக்கு கீழ்ப்படிந்து நடக்க அவர் தீர்மானித்தார்.

நம்முடைய காலத்திலே, வேதவாக்கியங்களை புறக்கணிக்க வேண்டும் என்னும் உண்மையான சோதனை இருக்கின்றது. சூழ்நிலைக்கு பொருத்தமானதாக நாம் உணர்ந்துகொள்ளும் தீர்மானங்களை நாம் எடுக்கிறோம். நம்முடைய சொந்த வழியை கண்டுபிடிக்க வேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான். மிகவும் அறிவுபூர்வமான வாதங்களை அவன் நமக்கு முன்பாக வைப்பான். நம்மிடம் அவன் விவாதிப்பான். "மேம்பட்ட வழி"யை அவன் காண்பிப்பான். நிகழ்ச்சிகளையும் நுட்பங்களையும் அவன் நமக்கு கொடுப்பான். பலரும் இந்த பொறியிலே விழுந்துவிடுகிறார்கள். வேதத்தின் கோட்பாடுகளை என்னால் விவரிக்க முடிந்தாலும், மக்கள் வேறு ஒரு வழியை தேர்ந்தெடுப்பார்கள் என்னும் புரிந்துகொள்ளுதலினால் என்னுடைய வேதாகமத்தை போதிக்கும் ஊழியத்தில் அடிக்கடி நான் மனச்சோர்வு அடைவது உண்டு. வேதவாக்கியங்கள் காலாவதியாகிவிட்டதை போலவும், நம்முடைய திருச்சபைகளில் இனி அவை செயல்படுத்தப்பட முடியாது என்பதை போலவும் நாம் உணர்கிறோம். வேதாகமத்தின் தெளிவான எளிமையான போதனையின் மீது நமக்கு நம்பிக்கை இருப்பதை போல தெரியவில்லை. சில நேரங்களில், வேதத்தின் மீது இருக்கும் நம்பிக்கையைவிட நம்முடைய சொந்த நிகழ்ச்சிகள் மீது நாம் அதிக நம்பிக்கையோடு இருக்கிறோம். இது சாத்தானிடம் இருந்து வரவில்லையா?

சில நேரங்களில் வேதவாக்கியங்களை தேர்ந்தெடுத்து, திரித்து நம்முடைய தேவைகளுக்காக நாம் பயன்படுத்திக்கொள்கிறோம். ஏதேன் தோட்டத்திலே ஏவாளிடம் தேவன் கூறிய வார்த்தைகள் மீது சவால் விடுத்த சாத்தான்

இதைத் தானே செய்தான் (ஆதியாகமம் 3:1 பார்க்க) தேவாலயத்தில் இருந்து இயேசுவை குதிக்கச் செய்யும்படி சோதிப்பதற்காக வேதவாக்கியத்தை பயன்படுத்தியபோது அவன் இதைத் தானே செய்தான்?

பிசாசு அவன் விரும்புவதை எல்லாம் சொல்லும்படி, வேதவாக்கியங்களை தன்னுடைய விருப்பப்படி திரித்து கூறுவான். வேதவாக்கியங்கள் பழங்கால கலாச்சாரங்களை பிரதிபலிக்கின்றன, நவீன கலாச்சாரத்திற்கும், நம்முடைய காலத்தின் பிரச்சனைகளுக்கும் அவை ஒன்றும் கூறவில்லை என்று சொல்வான். ஒருசில வேதவாக்கியங்களை புறக்கணித்து, ஒரு சில வேதவாக்கியங்களை மட்டும் மேற்கோள் காட்டுகிற சிலரை நான் சந்தித்து இருக்கிறேன். தங்கள் செயல்களை நியாயப்படுத்த வேண்டும் என்று அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். தேவனுடைய அன்பை குறித்தும் மன்னிப்பை குறித்தும் வசனங்களை அவர்கள் மேற்கோள் காட்டி, நியாயத்தீர்ப்பு மற்றும் தனிப்பட்ட பரிசுத்த தொடர்பான வசனங்களை புறக்கணிப்பார்கள். வேதவாக்கியங்கள் கூற முற்படாத காரியங்களை நம்முடைய விருப்பபடி திரித்து கூறுவதன் மூலம் எந்த ஒரு பாவத்தையும் நாம் நியாயப்படுத்திவிடலாம்.

சில நேரங்களில் தேவனுடைய நோக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிவது இல்லை. ஆனாலும், அவர் என்ன செய்கிறார் என்பது அவருக்கு தெரியும் என்பதை நான் அறிவேன். அவர் வெளிப்படுத்தின வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க நான் தீர்மானித்து இருக்கிறேன்.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பது போல, வாழ்க்கையின் பாதையில், தேவனுடைய வார்த்தை நமக்கு ஒரு வழிகாட்டி. தேவனுடைய இதயத்தையும் நோக்கத்தையும் அது நமக்கு வெளிப்படுத்துகின்றது. நம்முடைய கலாச்சாரம் மாறும்போது, தேவனும் மாறுவதில்லை, அவருடைய நோக்கங்களும் மாறுவது இல்லை. நம்முடையுய வாழ்க்கைக்கு

தேவனுடைய விருப்பம் என்ன என்பதை வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. முன்பு போலவே இப்போதும் வேதாகமத்தில் போதிக்கப்பட்ட கொள்கைகள் மதிப்பு உடையனவாகவும், செயல்படுத்தக்கூடியனவாகவும் இருக்கின்றன. திருச்சபையின் பிரச்சனைகளுக்கு வேதத்துக்கு புறம்பே தீர்வு காண கிறிஸ்தவர்கள் முயற்சிப்பது எவ்வளவு வேதனை அளிக்கின்றது. நமக்கு ஆபத்து உண்டாக்கவே நாம் வேதவசனங்களை புறக்கணிக்கிறோம்.

பிசாசின் சோதனைகளை இயேசு சந்தித்தபோது, அவரிடம் இரண்டு கருவிகள் இருந்தன. அவரை நிரப்பி, வழிநடத்திய தேவனுடைய ஆவி அவரிடம் இருந்தது. வேதவாக்கியங்களின் உண்மையும் அவருடைய இருதயத்திலே மறைந்து இருந்தது. இவ்விரண்டு கருவிகளும் சாத்தானை வீழ்த்தின. இந்த கருவிகள் நம்மிடமும் இருக்கின்றன.

இயேசுவை நிரப்பி, வழிநடத்திய அதே ஆவியானவர் நம்மையும் நிரப்பி வழிநடத்துவார். இயேசுவை வழிநடத்திய அதே வேதவாக்கியங்கள் நமக்கும் கிடைக்கப்பெறுகின்றன. தேவனுடைய ஆவியும், அவருடைய வார்த்தையின் உண்மையும் சத்துரு நம் மீது எறியும் எவ்வித சோதனையின் மீதும் வெற்றியை கொண்டு வர முடியும். அவருடைய ஆவியின் நிறைவிலும், வழிநடத்துதலிலும் நடக்கவும், அவருடைய வேதவாக்கியத்தின் உண்மைக்கு கீழ்ப்படிந்து நடக்கவும் தேவன் தாமே கற்றுத்தருவாராக. அப்படி நடந்தால் மட்டுமே, வெற்றியின் முழுமையை நாம் அறிந்துகொள்ள முடியும்.

## கருத்தில்கொள்ள வேண்டியவை

- பரிசுத்த ஆவியினால் நிறைவது என்றால் என்ன?
- சோதனை நேரத்தில் பரிசுத்த ஆவி நமக்கு எவ்வாறு வெற்றியை தருகிறார்

• பிசாசின் சோதனைகள் மீது வெற்றி பெறுவதில் வேதவாக்கியங்கள் அளிக்கும் பங்கு என்ன?

• விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை திரிப்பதை அல்லது புறக்கணிப்பதை எப்போதாவது நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா ? விளைவு என்ன?

## ஜெபிப்பதற்காக:

• தேவனுடைய ஆவியானவருக்கும், உங்கள் வாழ்க்கையில் அவருடைய வழிநடத்துதலுக்கும், எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கும் இதயத்தை கொடுக்கும்படி ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

• அவர் எப்போதும் மாறாதவராக இருப்பதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். எப்போதும் இருப்பதை போல, இப்போதும் அவருடைய வார்த்தை உண்மையுள்ளதாக இருப்பதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

• பரிசுத்த ஆவியின் உந்துதலையும், நடத்துதலையும் உணர்ந்துகொள்ள போதிக்குமாறு கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

• தேவனுடைய வார்த்தைக்கும், அது போதிக்கும் உண்மைக்கும் அதிகமான பசிதாகத்தை கொடுக்கும்படியாக கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

. உங்களுக்கு புரியாவிட்டாலும், அவருடைய வார்த்தையில் கூறுவதை நம்புவதற்கு அதிகமான கிருபை அளிக்குமாறு அவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்.

# என் பாதைக்கு வெளிச்சம்

என் பாதைக்கு வெளிச்சம் (LTMP - Light to my Path Book Distribution) புத்தகங்கள் எழுதி அதை விநியோகிக்கும் ஊழியமாகும், ஆசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆப்பரிக்கா தேசங்களில் தேவையுள்ள கிறிஸ்துவ பணியாளர்களுக்கு சேரக்கூடிய ஊழியம். வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள கிறிஸ்துவ பணியாளர்களுக்கு தேவையான வேதாகம பயிற்சி புத்தகங்கள், மற்றும் வேதத்தை முறையாக கற்பதற்கும், மற்றும் அவர்களை ஊக்குவிப்பதற்கான புத்தகங்களை பெற வசதிகள் இல்லை. எப். வெயின் மேக் லீயோட், சர்வதேச செயல்பாடு ஊழியத்தின் அங்கத்தினராக இருந்து உலகம் முழுதும் தேவையுள்ள போதகர்களுக்கும், கிறிஸ்துவ பணியாளர்களுக்கும் சேரக்கூடிய வகையில் புத்தகங்களை எழுதி விநியோகித்து வருகிறார்.

இந்நாள் வரை ஆயிரக்கணக்கான இப்புத்தகங்கள் செய்திகளிலும், பிரசங்கங்களிளும், கற்பிப்பதிலும், சுவிசேஷங்களிலும் மற்றும் தனிப்பட்டோரை ஊக்குவிப்பதிலும் ஏறக்குறைய நாற்பது தேசங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்புத்தகங்கள் தற்போது கொரியன், ஸ்வேலி, ஹிந்தி, ப்ரெஞ்சு, உருது, ஸ்பேனிஷ், ஹைத்தியன் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருகின்றன. இவ்வூழியத்தின் இலக்கு எல்லா விசுவாசிகளுக்கும் இப்புத்தகங்கள் சேர வேண்டும் என்பதே.

இவ்வூழியம் முற்றிலும் விசுவாசத்தை சார்ந்த ஊழியமாகும். உலகெங்கும் விசுவாசிகள் ஊக்குவிக்கப்படுவதற்கும், பலப்படுத்தபடுவதற்கும் இப்புத்தகங்களை விநியோக செய்ய தேவைகளை கர்த்தர் தாமே சந்திப்பார் என்று விசுவாசிக்கின்றோம். இப்புத்தகங்கள் இன்னும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படவும் விநியோகிக்கவும் தேவன் தாமே புதிய வாசல்களை திறக்க வேண்டும் என்று ஜெபிப்பீர்களா?

(LTMP) பாதைக்கு வெளிச்சம் புத்தகங்களின் விநியோகத்தைப்பற்றி மேலும் தகவல் அறிய எங்கள் வலைதளம் முகவரி - www.ltmp.ca